Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-10

நாதம் ௧௪ திருவள்ளுவர் ஆண்டு ௨௦௩௪ ஐப்பசி -06 23-10-2003 வியாழக்கிழமை ஓசை ௨௪௭




# இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு குறித்து தமிழ்க் கூட்டமைப்புடன் புலிகள் ஆராய்வு

## கிளி.யில் இரண்டு மணிநேரம் நடந்த சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

**“இன்றைய பேச்சுக்களில் முக்கியமாக இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு சம்பந்தமாகவும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாகவும் எமது எதிர்கால அரசியல் நகர்வுகள் சம்பந்தமாகவுமே கூடுதலாகப் பேசினோம்” எனத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் நேற்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.**

நேற்றைய தினம் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் சார்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன் மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், சிவ சத்தி ஆனந்தன் ராஜதுகனேஸ்வரன், சிவாஜிலிங்கம், விநாயகமூர்த்தி, ஆகியோரும் சுரேஸ் பிறேமச்சந்திரனும்

(10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பு

## இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு கையளிப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்று

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் இரா. சம்பந்தன்

முதல் தடவையாக தமிழீழ விடுதலைப்புலிகளால் எழுத்து மூலமாகத் தமது நிலைப்பாட்டையும் ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாட்டையும் அரசிடம் கையளிக்கப்போகும் நிகழ்வு ஒரு சரித்திரரீதியாக மிகவும் முக்கியமான விடயம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தமிழீழ அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகள் இந்த இடைக்கால வரைவை சமர்ப்பிப்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கிறது. இதனைத் தொடர்ந்து இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும். நாம் இன்றைய சந்திப்பில் இந்த வரைவில் உள்ளடக்குவதற்கான பல விடயங்கள் சம்பந்தமாகப் பேசியுள்ளோம். ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த இடைக்கால நிர்வாகத் திட்டவரைவை அரசிடம் சமர்ப்பிக்கும்வரை அதில் உள்ளடக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## - வவுனியா நகர்ப் பகுதியில் -

## புத்தகக்கடை உரிமையாளர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலி!

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் நேற்று இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கேதீஸ்வரன் (வயது40) எனும் வர்த்தகரே உயிரிழந்தவர் எனவும் மேற்படி நபர் வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் புத்தகநிலையம் ஒன்றை நடத்தி வருபவர் எனவும் புத்தக நிலையத்தைப் பூட்ட முயன்ற போதே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் வவுனியா பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (10,21)

### வீரச்சாவு

மட்டக்களப்பு பாவற் கொடிச் சேனைப்பகுதியில் 18.10.1993 அன்று சிறிலங்கா இராணுவத்தின் சுற்றி வளைப்பின்போது நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார். நாட்டுப் பற்றாளர் மகாலிங்கசிவன் ஞானசம் பந்தன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி படைத் தளத்திலிருந்து யாழ்.நகருக்கு டாங்கிகள் நகர்வு

(யாழ்ப்பாணம்)

பலாலி படைத்தளத்தில் இருந்து யுத்த டாங்கிகள், கனரக ஆயுதங்கள் என்பன பலத்த பாதுகாப்புடன் நேற்று யாழ். நகர் நோக்கி நகர்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று, மாலை ஆறு மணியளவில் வாகனத் தொடரணி மூலம் இவை யாழ். நோக்கி எடுத்துவரப்பட்டன. இதன்போது பெருமளவிலான படையினர் வீதியின் இரு மருங்கிலும் நின்று பாதுகாப்பு வழங்கியதுடன் இத்தொடரணியின் முன்னாலும் பின்னாலும் கனரக ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். (33)

## இந்தியாவுடனான ஒப்பந்தத்திற்கு பொ.ஐ.முன்னணி ஆதரவு

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளும் சிறிலங்கா அரசின் முடிவிற்கு எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணி ஆதரவு தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு விவகாரம் குறித்து இந்திய- சிறிலங்காப் பிரதமர்கள் விவாதித்துள்ளது தெரிந்ததே.


## பருத்தித்துறையில் மீனவர் மீது படையினர் தாக்கு மக்களின் எதிர்ப்பையடுத்துப் பதற்றம்

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து அங்கு குவிந்து நின்ற பொதுமக்கள் மீது படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். படையினரின் இத்தாக்குதலினால் ஐந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயங்களிற்கு உள்ளானதுடன் அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றும் படையினரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த மீனவரான பீற்றர் மாறன் (வயது-23) என்பவர் கரையோர காவலரணில் இருந்த படையினரால் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் தாக்கப்பட்டுள்ளார். கடற்கரை வீதியில் புனித தொம்மையப்பர் தேவாலயத்திற்கு முன்னதாக உள்ள இராணுவ சோதனைச் சாவடியில் தனது மீன்பிடி பாஸ் இனைச் சமர்ப்பித்துவிட்டு சக இரு மீனவர்களுடன் தொழிலுக்குச் செல்ல இவர் முற்பட்டுள்ளார்.

அவ்வேளையில், குறித்த காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர், பீற்றர் மாறனை தமது காவலரணிற்கு வருமாறு திருப்பி அழைத்துள்ளனர். அங்கு வந்த அவரைக் காரணம் ஏதும் தெரிவிக்காது படையினர் தாக்க ஆரம்பித்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



கொடும்பாவி எரிப்பு

## கண்காணிப்புக்குழுவை நாட்டைவிட்டு வெளியேறுமாறு சிங்களவர் ஆர்ப்பாட்டம்

### – திருமலையில் க.கா.கு.தலைவரின் கொடும்பாவி எரிப்பு

(திருகோணமலை)

நோர்வே கண்காணிப்புக் குழுவை நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரியும், வடக்கு-கிழக்குமாகாண இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளுக்குக் கையளிக்க வேண்டாம் என்று கோரியும் கிழக்கு மக்கள் முன்னணி என்ற அமைப்பு நேற்று புதன்கிழமை பகல் திருகோணமலையில் நடத்திய ஆர்ப்பாட்டப்பேரணியை திருமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தை நோக்கி முன்னேறவிடாது பொலிஸ் லொறிகள், இராணுவ கவச வாகனம் ஆகியவற்றை வீதிக்கு குறுக்காக நிறுத்தி பொலிசார் தடை செய்தனர்.

பேரணியில் எடுத்து வரப்பட்ட நோர்வே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் கொடும்பாவியை மறித்த இடத்தில் வைத்து எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் கலைந்து சென்றனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் திருமலை கண்டி வீதியில் உள்ள நான்காம் கட்டைச் சந்தியிலிருந்து ஆரம்பமானது. ஆர்ப்பாட்டப் பேரணி அங்கிருந்து புறப்பட்டு அபயதரா, உப்புவெளி, சிறிமாவோபுர வழியாக நகரை வந்தடைந்தது. பின்னர் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியிலிருந்து புறப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி கடற்படைத் தள வீதி, தபால் நிலைய வீதி வழியாக உள்துறைமுக வீதிக்கு திரும்பி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை நோக்கிச் செல்ல முற்பட்டபோது பொலிசார், நடவடிக்கைகளை எடுத்தனர். வீதியை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தென்பகுதியிலிருந்து வரும் ஐஸ்கட்டிகளை குளிர்பானங்களுக்குப் பயன்படுத்தத் தடை

முல்லைமாவட்ட தமிழீழ சுகாதார சேவையினர் முல்லைமாவட்டத்திற்குள் தென்பகுதியில் இருந்து வரும் ஐஸ்கட்டிகளை மக்களின் குளிர் பானத் தயாரிப்பிற்குப் பயன்படுத்துவதை முற்றாகத் தடை செய்துள்ளனர். மேற்படி விடயம் தொடர்பாக முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவை பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்பகுதியில் இருந்து மீனுக்காகக் கொண்டுவரப்படும் ஐஸ். கட்டிகளை மக்களின் குளிர் பான பாவனைக்காக விற்கப்படுவது எம்மால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ் ஐஸ்கட்டியானது மனித பாவனைக்காக சுகாதார முறைப்படி சுத்திகரிக்கப்பட்ட நீரில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. மீனுக்காக உற்பத்திசெய்யபட்டு கூலர் வாகனங்களில் முல்லைத்தீவு அளம்பில் செம்மலைப் பகுதிகளுக்குக் கொண்டுவந்து சர்பத் குளிர் குடிநீர் உபயோகத்திற்காக விற்கப்படுகின்றது. இதனால் பாவனையாளர்களுக்கு பல தொற்று நோய்கள் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத தவிர்க்கும்முகமாக மனித பாவனைக்கு இவ் ஐஸ்விற்கப்படுவதைத் தாம் தடுத்துள்ள அதே வேளை ஐஸ்கட்டிகளை சுகாதார சேவையினரின் அனுமதி இன்றி எவரும் பெற்றுக்கொள்ள வேண்டாம் எனவும் தமது அனுமதி இன்றி தென் பகுதியில் இருந்து கொண்டு வரும் ஐஸ் கட்டிகளை விற்பவர்கள் மீதும் அதனை வாங்குபவர்கள் மீதும் சுகாதார சட்டதிட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.


இந்நடவடிக்கைக்கு முன் முள்ளியவளை முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் தென்பகுதி ஐஸ்கட்டிகளே சர்பத் மற்றும் தண்ணீர்ப் பந்தல் சேவை போன்றவற்றிற்கு பாவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# நலிவுற்றோர் நலன் வாழ்வுத்திட்ட உண்டியல் கையளிப்பு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

நலிவுற்றோர் நலன்வாழ்வுத் திட்ட "உண்டியல்" அறிமுக நிகழ்வு நேற்று பி.ப.3.30 மணிக்கு கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

சமுதாய முன்னேற்ற நிலைய நிர்வாகச் செயலாளர் சி.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,



மங்கல விளக்கினைக் கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தன் ஏற்றிவைக்க தமிழீழதேசியக் கொடியினை நிறுவன நிர்வாக இயக்குனர் இ.சிரஞ்சீவி ஏற்றிவைத்தார்.

தலைமையுரை, வரவேற்புரையினையடுத்து நிறுவனங்களிடம் உண்டியல் கையளிப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. முதல் உண்டியலினை கரைச்சிப் பிரதேச செயலர் வழங்கி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து உண்டியல் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக துணைப் பொறுப்பாளர் இனியவன், மூதாளர் பேணலகப் பணிப்பாளர் குரு,கனகபுரம் கி.சே.அலுவலர் பசுபதிப்பிள்ளை மற்றும் அரச,அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர். (சோ)

# அடுத்த சில மாதங்கள் முக்கியமானதாகவும் சிரமம் நிறைந்ததாகவும் இருக்கும்

## சிறிலங்காப் பிரதமர் இந்திய ஊடகத்திற்கு தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வு காண முடியுமெனதான் முழுமையாக நம்புவதாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் யு.என்.ஐ. செய்தியாளர்களுக்கு நேற்று வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 வருடங்களாக இலங்கையை வாட்டிவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதில் மேடு, பள்ளம் நிறைந்ததாக இருக்கும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் கடந்த சில மாதங்கள் பெரும் முன்னேற்றத்தைக் காணவில்லையென்றாலும் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை குறித்த விடுதலைப்புலிகளின் நகல் திட்டத்திற்காக அரசாங்கம் காத்திருக்கிறது. இந்நகல் திட்டம் கிடைத்தவுடனேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனக் கூறியுள்ள பிரதமர் அடுத்த சில மாதங்கள் மிக முக்கியமானதாகவும், சிரமங்கள் நிறைந்ததாகவும் இருக்கும் என்றார்.

## பரிசளிப்பு நிகழ்வு

சர்வதேச சிறுவர்தினப் போட்டியில் பரிசில்கள் பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வு 23 ஆம் 28-ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரியில் துணுக்காய்ப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு துணுக்காய்ப் பிரதேச சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கேட்டுக் கொள்கிறார். (24)

## -வீதி ஒழுங்கு சமூக ஒழுக்க நடவடிக்கை-

# தமிழீழக்காவல்துறையினரால் முள்ளியவளையில் கருத்துப் பரிமாற்றம்

முள்ளியவளைப் பிரதேசத்தில் முள்ளியவளைப் பிரதேச தமிழீழக் காவல்துறையினர் வீதி ஒழுங்கு மற்றும் சமூக ஒழுக்க நடவடிக்கை சம்பந்தமான கருத்துப் பரிமாற்றங்களை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி முள்ளியவளைப் பிரதேச காவல்துறையினர் கடந்த 19-ஆம் திகதி பி.ப.1.00 மணியளவில் முள்ளியவளைப் பிரதேச வர்த்தகர்களுக்கான வீதி ஒழுங்கு மற்றும் சமூக ஒழுங்கு சம்பந்தமாகவும் களவு மற்றும் சமூக விரோதிகள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கலந்துரையாடலை முள்ளியவளைப் பிரதேச தண்ணீரூற்றுக் காவல் பணிமனையில் நடாத்தியுள்ளனர்.

இது தொடர்பான கருத்துரையினை முள்ளியவளைப் பிரதேச தமிழீழக் காவல்பணிமனைப் பொறுப்பதிகாரி கிருஸ்ணகுமார் வழங்கினார். மேற்படி கலந்துரையாடலில் 50 ற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் கலந்துகொண்டு தமது வீதி இடையூறு சம்பந்தமாக கேள்விகளை எழுப்பினார்கள். அப்போது பொறுப்பதிகாரி பதிலளிக்கையில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு சீர்செய்யப்படும் எனவும் வேகக் கட்டுப்பாடு சம்பந்தமான விளம்பரம் செய்யப்பட்டு வேகக் கட்டுப்பாட்டை அமுல்படுத்தி வீதி விபத்துக்களைத் தவிர்க்க வர்த்தகர்கள் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்படும் போது எமது நடவடிக்கையும் வெற்றியளிக்கும் எனவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் சகலரும் விழிப்புணர்வுடன் செற்பட வர்த்தகர்களாகிய நீங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்களுக்கு இயன்றவரை விளக்கமளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ஆ)

# புதுக். பொன்னம்பலம் மருத்துவமனையில் இலவச மருத்துவ முகாம்

யாழ். போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் ரவிராஜ் தலைமையிலான மருத்துவர் குழு புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையுடன் இணைந்து இரு நாட்கள் இலவச மருத்துவ முகாமை நடத்தவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இம்மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

அத்துடன் இவர்களுடன் இணைந்து நாளை மறுதினம் சனிக்கிழமை குழந்தை மருத்துவர் டாக்டர் சொலமன் அவர்களும் மருத்துவ சேவையினை வழங்கவுள்ளார்.

பயன்பெறவிரும்புவோர் உரிய நேரத்தில் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சமுகமளிக்குமாறு மருத்துவமனைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# ஓமந்தைப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றல்

(செட்டிகுளம்)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது புதைக்கப்பட்ட வெடி பொருட்களினை வெடிபொருள் அகற்றும் விசேட இராணுவத்தினர் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மக்கள் மீளக் குடியமரத் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் எவ். எஸ். டி. நிறுவனம் கண்ணி வெடிகளினை அகற்றியுள்ளது. எவ்.எஸ். டி. நிறுவனம் அகற்றாத இடங்களில் இராணுவத்தினர் வெடிபொருட்களினை அகற்றி வருகின்றனர். அத்துடன் ஓமந்தைப் பாடசாலையின் எல்லைப் பகுதியிலும் இராணுவம் கண்ணி வெடிகளை அகற்றி வருகின்றது. (21)

# கண்டாவளைப் பி.செ.பிரிவில் பிறப்பு இறப்புப் பதிவுகள்

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்தில் காலம் கடந்த பிறப்பு,இறப்புப் பதிவுகள் கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனையில் இன்று காலை 9.00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. இப்பதிவு சேவைக்குப் பிரதிப் பதிவாளர்நாயகம் வருகை தரவுள்ளார். எனவே இப்பிரதேசத்தில் இதுவரை பிறப்பு,இறப்பு விவாகப் பதிவுகள் மேற்கொள்ளாதோர் தவறாது வந்து பதிவினை மேற்கொள்ளுமாறும் இதுவே கடைசிச் சந்தர்ப்பம் எனவும் பிரதேச செயலர் பி.கா.மத்தியாஸ் அறிவித்துள்ளார். (14)

# நெடுந்தீவு கடற்பரப்பில் மீண்டும் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறல்

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்து மீறி தொழில் செய்யும் இந்திய இழுவைப் படகுகளின் அடாவடித் தனங்கள் மீண்டும் அதிகரித்து வருவதாக அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இவ்வாறு அத்துமீறித் தொழில் செய்து தமது வளங்களை சுரண்டிச் செல்வது குறித்து பொலிசார் நடவடிக்கை எடுப்பர் என உறுதியளிக்கப்பட்டபோதும் பொலிசார் மற்றும் கடற்படையினரின் கண் களில் மண்தூவிவிட்டு இவ்வாறான அத்துமீறி மீன்பிடிக்கும் நடவடிக்கை தொடர்வதால் இப்பகுதி மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (33)


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## பருவகாலச்சீட்டு வழங்கல்

பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு மாணவர்களின் நலன்கருதி அதிபர் அவர்களால் மாணவர்களின் பெயர், கற்கும்தரம், இடம் ஆகியவற்றை விதந்துரை செய்யப்பட்ட பாட சாலை முத்திரையுடன் பணத்தையும் பெற்று ஒருவர் மூலம் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டு கின்றோம்.

- **மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் சீட்டு வழங்கப்பட மாட்டாது.**
- **பருவகாலச்சீட்டு பெற்றுக் கொள்ளும் இடங்கள்**

பேருந்து நிலையம் முல்லைத்தீவு, தமிழீழப்போக்குவரவுக்கழகம் புதுக்குடியிருப்பு, பேருந்து நிலையம் புளியங்குளம், பேருந்து நிலையம் மல்லாவி, பேருந்து நிலையம் முகமாலை, வழி அனுமதிப்பணியகம் பளை, பூநகரி மகாவித்தியாலயம், தமிழீழப் போக்குவரவுக் கழகம், கிளிநொச்சி.

மேற்காட்டிய இடங்களில் 25ஆம் நாள் தொடக்கம் 30ஆம் நாள் வரை வழங்கப்படும். அரச பணியாளர்கள் இதே இடங்களில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**முகாமையாளர்,**
**நடுவப்பணிமனை,**
**தமிழீழப்போக்குவரவுக்கழகம்,**
**விசுவமடு.**

(சி-8667)

## அமெரிக்கா கவலை

அஜர்பைஜானில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தல் நீதியற்ற முறையிலும், பல்வேறு முறை கேடுகளுடனும் நடந்துள்ளமை குறித்து அமெரிக்க ராஜாங்க செயலகம் கவலை தெரிவித்துள்ளது. இருப்பினும் கடந்த அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவருக்கு தமது ஆதரவு தொடருமென செயலகம் மேலும் கூறியுள்ளது.

# பலஸ்தீனத்தை ஊடறுக்கும் பாதுகாப்புச் சுவர் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட வேண்டும்!

## ஐ.நா.பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

**மேற்குக்கரையோரப் பகுதியிலுள்ள பலஸ்தீன பிரதேசத்தை ஊடறுக்கும் வகையில் இஸ்ரேலினால் நிர்மாணிக்கப்படுகின்ற பாதுகாப்புச் சுவர் அமைப்பு வேலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென ஐ.நா பொதுச்சபை தீர்மானித்துள்ளது.**

இஸ்ரேலினால் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்படும் செயற்பாட்டை ஆட்சேபித்து ஐ.நா. பொதுச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் பதினைந்து நாடுகள் கூட்டாக மேற்படி தீர்மானமொன்றை பொதுச் சபையில் சமர்ப்பித்திருந்தன.

இது தொடர்பாக பொதுச் சபையில் இடம் பெற்ற விவாதத்தின் இறுதியில் தீர்மானத்திற்கு ஆதரவாக 144 நாடுகள் வாக்களித்தன. நான்கு நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

பன்னிரெண்டு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

மேலும் இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இரண்டும் வரையறுக்கப்பட்ட எல்லைகளை அவதானித்து நடந்து கொள்ள வேண்டும் எனவும் வன்செயல்கள், பயங்கரவாத நடவடிக்கைகள், பேரழிவுகள் என்பன நிறுத்தப்பட வேண்டும் என்றும் தற்கொலை தாக்குதல்கள் கைவிடப்பட வேண்டும் என்றும் இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு, காஸாமுனையில் அண்மையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் காரணமாக மூன்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் பலியான சம்பவம்தொடர்பாகவும் இந்த பொதுச் சபைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சபையில் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் இது பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்டாலே வலுவுள்ள தீர்மானமாகக் கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



இஸ்ரேலையும் காஸாப் பகுதியையும் பிரிக்கும் வேலியின் வாயில் கதவை பலஸ்தீன பாடசாலைச் சிறுவனுக்காக திறந்துவிடும் இஸ்ரேலிய இராணுவம்.

# ஐரோப்பாவின் கோப்பியே இருதய நோய்க்குக் காரணம்

## -பிரிட்டிஷ் பிரதமர் தெரிவிப்பு

(லண்டன்)

தனது இருதய நோய்க்கான காரணம் ஐரோப்பாவின் கரும் கோப்பிதான் என ரொனிபிளேயர் கூறியுள்ளார்.

கடந்த வார இறுதியில் இருதய நோயிற்கு உட்பட்டு பிளேயர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தனக்கு ஏற்பட்ட இருதய நோய்க்கான காரணியாக ஒரு வாரகாலமாக அவர் பங்கேற்ற ஐரோப்பிய மாநாட்டில் வழங்கப்பட்ட கருமையான கோப்பி தான் காரணமெனக் கூறியுள்ளார். இம் மாநாடு பிரஸ்லஸ்சில் நடைபெற்றது. இதன் போது அதிகோப்பி பானங்களை தான் அருந்தியதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இவரது இக்கருத்தை மருத்துவ உதவியாளர்களும் ஓரளவிற்கு ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஆசிய-பசுபிக் பொருளாதார ஒன்றிய மாநாட்டின் 2ஆம் நாள் கலந்துகொண்டவர்களில் இடமிருந்து வலமாக (பின்வரிசை) சீன சனாதிபதி ஹியுஜின்டோ, ஆஸி பிரதமர் ஜோன்ஹவாட், அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ், மெக்சிக்கோ சனாதிபதி வைசன்டி பொக்ஸ், சிங்கப்பூர் பிரதமர் கோகொக்டொங் ஆகியோர், முன்வரிசையில் இடமிருந்து வலமாக தென்கொரிய சனாதிபதி ரோ.மூ.ஹயுன், மலேசியப் பிரதம மகதிர் மகமத் தாய், பிரதமர் தக்சின்-சினவட்ரா, இந்தோனேசிய அதிபர் மேகவதி சுகர்னுபுத்ரி ஆகியோர்.

# உலக சமாதானத்திற்காக அமெரிக்கா ஐ.நா.வுடன் இணைந்து செயற்பட வேண்டும்

## கோபிஅனான் அழைப்பு

சமாதானம் நிறைந்த உலகை கட்டியெழுப்பும் முகமாக அமெரிக்காவும்,ஐக்கியநாடுகள் சபையும் இணைந்து செயற்பட வேண்டுமென ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா மேற கொண்ட போரைத் தொடர்ந்து இருதரப்பினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை புறம் தள்ளி விட்டு உலக சமாதானத்திற்காக இணைந்து செயற்படுவது அவசியம் என அவர் மேலும் கூறியுள்ளார். அமெரிக்காவிற்கும் ஐக்கியநாடுகள் சபைக்கும் இடையே கருத்து முரண்பாடுகளும், மோதல்களும் இடம் பெறுவதாகக் கூறப்படுகின்ற செய்திகள் பொது மக்கள் மத்தியில் அதிருப்தியைத் தோற்றுவிக்கும் எனவும் கூறியுள்ளா.

அத்துடன் ஐ.நா.சபை உருவாவதில் முக்கிய பங்காற்றிய அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட வேண்டிய கடமை தனக்கு இருப்பதாகக் கூறிய அவர் இரண்டு தரப்பும் ஒவ்வொருவரது பங்களிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் கூறியுள்ளார்.



அடுத்த வருடம் நடைபெறவுள்ள இந்தோனேசியத் தேர்தலுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்ளவிருக்கும் பயிற்சிபெற்ற மோப்ப நாய்களுடன் தரையிறங்கும் இந்தோனேசிய ஆயுதப்படையினர்

# அணுவாயுதத் திட்டங்களை சோதனையிட ஈரானிய அரசு அனுமதி வழங்கியது!

## - யுரேனிய உற்பத்தியும் கைவிடப்படலாம்.

(தெஹ்ரான்)

தனது அணுவாயுதத்திட்டங்கள் உள்ள பகுதிகளை சோதனை செய்வதற்கும், யுரேனியம் உற்பத்திகளை கைவிடுவதற்கும் ஈரான் இணங்கியுள்ளது.

ஈரானின் இத் தீர்மானத்தை அன் நாட்டிற்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்று அமைச்சர்கள்வரவேற்றுள்ளனர்.

எவ்வாறாயினும்யுரேனிய உற்பத்தி திட்டங்களைத் தேவைப்பட்டால் மட்டுமே கைவிடுவதாக ஈரானின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ஈரானின் இச்செயற்பாடு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தி யுள்ளதாகவும், இதனை செயற்படுத்துவதன் மூலமே ஈரானின் எதிர்கால நடவடிக்கைகளை அவதானிக்க முடியுமென பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

அத்துடன் யுரேனியத் திட்டத்தை கைவிடுவதற்கு ஈரான் இணங்கியுள்ள அதேவேளை அதனை நிறைவேற்றினால் வரவேற்கக்கூடியதாக இருக்கும் என அமெரிக்கா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொடோ சட்ட மீளாய்வுக் குழுவிற்கு அதிகாரம் அளிக்க அவசர சட்டம்

## - மத்திய அமைச்சரவை தீர்மானம்

பொடோ சட்ட மறு ஆய்வு குழுவிற்கு சட்ட அதிகாரம் வழங்க அவசர சட்டம் கொண்டுவரப் போவதாக மத்தியஅமைச்சரவை முடிவு செய்துள்ளது.

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் பிரச்சினைகளை நீக்குவதற்கு இச்சட்டம் பயன்படும்.இவ் அவசர சட்டத்தின் கீழ்மறு ஆய்வு குழுவின் பரிந்துரைகளை மத்திய, மாநில அரசுகளும் பொலிஸாரும் அமுல் படுத்த வேண்டியது கட்டாயமாக்கப் படவுள்ளது. பொடோ சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டோர் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தின் அடிப் படையில் வழக்குகளை மறு ஆய்வு குழு பரிசீலனை செய்யவுள்ளது.

பல மாநிலங்களில் பொடோ சட்டம் தவறாகப்பயன்படுத்தப் பட்டிருப்பதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து இவ் அவசர சட்டம் கொண்டு வருவதாக நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார்.

# புனர்வாழ்வுப் பணிகளுக்கு சிங்கப்பூர் உதவியளிக்கும்!

(புதுடில்லி)

ஈராக்கின் புனரமைப்பு, மற்றும் புனர் வாழ்வு நடவடிக்கைகளுக்கென சிங்கப்பூர் இராணுவ வீரர்களையும், பாரிய விமானங்களையும், கடற்படை கப்பல்களையும் அனுப்பவுள்ளது. அமெரிக்க சனாதிபதி புஷ் சிங்கப்பூருக்கு மேற்கொண்ட விஜயத்தைத்தொடர்ந்து சிங்கப்பூர் பிரதமர் இதற்கான இணக்கத்தைத் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிடுகையில் திங்கட்கிழமை முதலாவது குழுவினர் புறப்படுவர் எனவும்,அவர்களை வழி அனுப்பும் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித் துள்ளது.



அரசாங்கம் அதிகாரப் பகிர்வுக்கு சாதகமான சமிக்ஞை காட்டியதால் ஆயுதங்களைக் கீழே வைக்க வட அயர்லாந்து போராளிகள் உறுதியளித்திருப்பினும் அதில் மீண்டும் சந்தேகம் எழும்பியுள்ளதால் தமது ஆயுதத்துடன் உசார் நிலையில் இருக்கும் அயர்லாந்துப் போராளி.

# உப்பு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி...

நேர்காணல்
கனகபுரச்சோதி




இவ் உப்பளத்தின் புனரமைப்பு மற்றும் செயற்பாடுகள் குறித்து முன்னாள் உப்புக்கூட்டுத் தாபன வட பிராந்திய முகாமையாளரும் தற்போதைய உப்பள நிறுவன ஆலோசகருமாகிய செல்லையா வேலாயுதபிள்ளை அவர்களை வினவியபொழுது தெரிவிக்கையில்,

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு இரு உப்பளங்கள் முறையே 600, 600 ஏக்கர் நிலப் பரப்பினைக் கொண்டவையாகும்.

இவற்றின் விளை நிலங்கள் முறையே 60,60 ஏக்கர் நிலப்பரப்பினை கொண்டவை. 1922ஆம் ஆண்டு முதல் 1932ஆம் ஆண்டு வரை மேற்படி ஆனையிறவு உப்பளம் என்ற பெயரில் கைத்தொழில் அமைச்சின் ஆணையாளரின் கீழ் இயங்கி 1933 முதல் 1966 வரை அரச உப்புத் திணைக்களத்தின் கீழும், அதன் பின்1967 முதல் 1990 வரை தேசிய கூட்டுத் தாபனத்தினாலும், 1990 பிற்பகுதியிலிருந்து 1996 வரை லங்கா சோல்ட் லிமிட்டட் (வரையறுக்கப்பட்ட) ஆகியவற்றினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதிவரை மேற்படி உப்பளத்தில் 300 பேர் நிரந்தர ஊழியர்களாகவும், 150 பேர் தற்காலிக ஊழியர்களாகவும், 500 முதல் 600 பேர் பருவ கால ஊழியர்களாகவும் பணிபுரிந்து வந்தனர். (அதாவது, யூன் மாதம் முதல் ஒக்டோபர் வரை)

அதன் பின் இராணுவ அனர்த்தங்கள், இராணுவ ஆக்கிரமிப்பினால் படிப்படியாக உப்பு உற்பத்தி பாதிப்படையத் தொடங்கியது.

இக்காலப் பகுதி அதாவது, 1983 முதல் 1990 வரையான காலப்பகுதியிலும் இவ்வுப்பளத்தினால் உள்ளூர் உப்புத் தேவையினைப் பூர்த்தி செய்யப்பெற்று வந்தும்கூட இதன் பிற்பகுதியில் 30 மெற்றிக் தொன் உப்பினைக்கூட கைவிட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதன் பின் இந்த இரு உப்பளங்களும் அதன் விளைநிலங்கள் யாவும் இராணுவ ஆக்கிரமிப்பினால் சேதமாக்கப்பட்டதுடன் இருந்த இடம் தெரியாது முற்றுமுழுதாக சிதைக்கப்பட்டது. பின் 2002ஆம் ஆண்டு பொருண்மிய மதியுரையகத்தினால் மேற்படி உப்பு நிறுவனம் பொறுப்பேற்கப்பட்டு யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

2003ஆம் ஆண்டு முற்பகுதியில் கிளி. அரச அதிபர். தி. இராசநாயகமும் பொருண்மிய மதியுரையகமும் யுனிசெவ் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டதன் பயனாக 2003 யூன் 27ஆம் திகதியன்று அயடின் கலந்த உப்பு உற்பத்தி நிலையக் கட்டடம் அமைக்க பொருண்மிய மதியுரையகமும், யுனிசெவ் நிறுவனமும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன.

சிறிலங்கா இராணுவத்தினரால் திட்டமிட்டு சிதைத்து சின்னாபின்னமாக்கப்பட்ட குறிஞ்சாத்தீவு உப்பளத்தினை மீண்டும் கட்டியெழுப்பி இயங்க வைக்கும் நடவடிக்கையினை பொருண்மிய மதியுரையகம் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தற்போது மேற்கொண்டு வருகின்றது.

1990ஆம் ஆண்டு வரை இவ் இரு உப்பளங்களின் மூலமாக வருடாவருடம் சராசரி 60 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு விளைச்சலைப் பெற்று இலங்கையின் உப்புத் தேவையினை தன்னிறைவு செய்து வந்ததுடன் 1976இல் உப்பு கையிருப்பு தேக்கமடையத் தொடங்கியதன் விளைவாக 1997 முதல் 1983 வரை காங்கேசன் துறைமுகமூடாக வெளிநாட்டிற்கு உப்பு ஏற்றுமதி செய்யப்பெற்றும் வந்தது.

ஆனையிறவு உப்பிற்கு இலங்கையில் யாழ்ப்பாணம் முதல் மாத்தறை வரை பெரும் மதிப்பு இருந்து வந்தது.

இதன் பிரகாரம், யுனிசெவ் நிறுவனத்தினா உப்பளத்தினை மீள இயங்க வைப்பதற்கென 2.6 மில்லியன் ரூபா பணமாகவும், 3.5 மில்லியன் ரூபா பொருட்களாகவும், அயடீன் கலக்கும் இயந்திர சாதனம் முதல் வழங்க முன்வந்துள்ளன.

தற்போது யுனிசெவ் நிறுவனத்தினால் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பெற்று நடைபெற்று வருகின்றன.

கடந்த 12 வருட காலமாக முற்றாகச் சீரழிந்த நிலையிலுள்ள உப்பு விளை நிலங்களினை முற்றாக சீர் செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது விளை நிலத்தில் பத்தில் ஒரு பகுதியே சீர் செய்யப்பெற்று உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பெற்று வருகின்றது.

இதன்படி நடப்பு வருடத்தில் 3000 மெற்றிக் தொன் உப்பு விளைச்சலினைப் பெறக்கூடியதாக இருந்தது. அடுத்த வருடத்தில் பத்தில் ஆறு பகுதி விளை நிலம் சீர் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் இப்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படின் அடுத்த வருடம் 15ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு விளைச்சலினைப் பெறமுடியும்.



குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு ஆகிய இரு உப்பளங்களின் மீள் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு குறைந்த பட்சம் ஏழு கோடி ரூபா பணம் தேவைப்படுகின்றது.



இதனை வெளிநாட்டு உதவி மூலமே நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். அப்படி நிதி கிடைக்கும் பட்சத்தில் இப் பணிக்கு முதலிடும் பணத்தினை மூன்று வருட காலத்தில் மீளப்பெற முடியும். இவ் உப்பள உப்பு உற்பத்தி மூலம் சரி நிகர் இலாபத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறினார்

இவர் 1956ஆம் ஆண்டு உப்பு பரிசோதகராகப் பணியினை ஆரம்பித்து படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று வடபிராந்திய முகாமையாளராக பதவி வகித்து 1990இல் ஓய்வுபெற்றார். தற்போது இந்நிறுவனத்தின் ஆலோசகராக சேவைபுரிந்து வருகின்றார்.

இந்நிறுவனத்தினை பொருண்மிய மதியுரையகம் (ரெக்) யுனிசெவ் வின் நிதியுதவியுடன் செயற்படுத்தி வருகின்றது.

தற்போது இந்நிறுவனத்தில் 10 நிரந்தர ஊழியர்களும், 10 தற்காலிக ஊழியர்களும்,100 பருவகால ஊழியர்களும் மற்றும்60 பெண் ஊழியர்கள் உப்பு பொதி செய்யும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் யாழ். இல் நடைபெறும் நடமாடும் சேவை!

## வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ளோரும் பயன்பெறலாம்

(அலுவலக செய்தியாளர்)

கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் எதிர்வரும் 31-10-2003முதல் 02-11-2003 வரை யாழ். மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படவுள்ள நடமாடும் சேவையில் வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள மோட்டார் வாகனப் பதிவுகள் மேற்கொள்ள வேண்டிய உரிமையாளர்கள் நேரில் சமுகம் கொடுத்து பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு 'கிளி. மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் ஆ. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

மேற்படி பதிவுகளை மேற்கொள்ளவுள்ளவர்கள், வாகன இயந்திர மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை வாகனத்தில் பொருத்தியவாறு யாழ். நடமாடும் சேவைக்குச் செல்லலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

சமுகம் கொடுக்க வேண்டியவர்களுக்கான விதிமுறைகள் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் ஆற்றப்படவுள்ள சேவைகள் கீழ்வருமாறு.

01) ஆவணங்கள் தொலைந்தமையால் இதுவரை பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பதிவு செய்தல் - இதன் நிமித்தம் உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்வருமாறு.

I).ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனம் பற்றிய விபரங்களையும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம் (ஆங்கிலத்தில்)

II அதேபோன்று ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனம் பற்றிய விபரங்களையும் உறுதிப்படுத்தும் சமாதான நீதவானின் கடிதம். (ஆங்கிலத்தில்)

மேற்படி கடிதங்களின் வாகன வகை, இயந்திரம், அடிச்சட்ட இலக்கங்கள், வாகன நிறம், வாங்கிய திகதி, வாங்கிய நிறுவனத்தின் பெயர் (தெரிந்திருப்பின்), ஆவணங்கள் தொலைந்த காரணம், இதுவரை பதிவு செய்யாமைக்கான காரணம் போன்றன தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

III) கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய இரண்டு கறுப்பு வெள்ளை புகைப்படம்.

IV) கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை/கடவுச் சீட்டு (வலுவில் உள்ளது) சாரதி அனுமதிப் பத்திரம் / தபால் அறிமுக அட்டை (வலுவில் உள்ளது) அதாவது ஒன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப் பிரதியும்.

V) அத்துடன் உரிமையாளர் நேரில் வாகனத்துடன் சமுகமளிக்க வேண்டும்.

02).ஆவணங்கள் தொலைந்தமையால் இதுவரை உடைமை மாற்றம் செய்யப்படாத வாகனங்களை உடைமைமாற்றம் செய்தல் - இவ் விபரம் தொடர்பாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்வருமாறு.

I) ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனங்கள் பற்றிய விபரங்களையும் முன்னர் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் விபரங்கள் தெரிந்திருப்பின் அது பற்றியும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம் - (ஆங்கிலத்தில்)

II) மேற்கூறுவது போன்று சகல விபரங்களையும் உள்ளடக்கிய சமாதான நீதவானின் கடிதம் - (ஆங்கிலத்தில்)

மேற்படி கடிதங்களில் வாகன வகை, இயந்திர இல., அடிச்சட்ட இலக்கம், வாகன நிறம், வாங்கிய திகதி, ( உடைமை மாற்றத் திகதி), முன்னைய பதிவு செய்த உரிமையாளர் பெயர், முகவரி, ஆவணங்கள், தொலைந்த காரணம், பதிவு செய்தமைக்கான காரணம் போன்றன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

03) இது வரை எம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட, புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதன் நிமித்தமான விண்ணப்பதாரிகளுக்கு எழுத்து மற்றும் செயல் முறைப் பரீட்சையை நடாத்துதல்- விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைத் திகதியை உறுதிப்படுத்தி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதவர்கள் உடன் யாழ். மோ. போ. திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

04) சாரதி அனுமதிப்பத்திர பரீட்சையில் சித்தியடைந்து தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று 1 வருடமாகியும் நிரந்தர சாரதி அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் தமது முறையீடுகளை கொழும்பு மோ. போ. ஆணையாளருக்கு எழுத்து மூலம் (ஆங்கிலத்தில்) சமர்ப்பிக்க முடியும்.

அதேபோன்று சாரதி இணைப் பிரதி, சாரதி அனுமதிப் புத்தகங்களை அட்டைகளாக மாற்றுதல், சாரதி அனுமதி அட்டைகளைப் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு விண்ணப்பம் செய்தும் இன்றுவரை சாரதி அனுமதிப் பத்திர அட்டை கிடைக்காதவர்கள் தமது முறையீடுகளை கொழும்பு மோ. போ. ஆணையாளருக்கு சமர்ப்பிக்க முடியும்.

குறிப்பு: பூர்த்தி செய்யப்பட்ட ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும், தபால் மூலம் அனுப்பி திருப்பிச் சென்ற ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும் எடுத்து வரப்படுவதால் விண்ணப்பதாரிகள் தங்களது அட்டைகள் எடுத்துவரப்பட்டிருப்பின் நேரில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

05) புதிய வாகனப் பதிவு, உடைமை மாற்றம், பதிவுச் சான்றிதழின் நகலப் பிரதி மற்றும் பதிவுச் சான்றிதழில் திருத்தம் செய்தல் போன்றவற்றிற்கு விண்ணப்பம் செய்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்று வரை கிடைக்கப்பெறாதவர்களும் தமது முறையீடுகளை கொழும்பு மோ.போ. ஆணையாளருக்கு எழுத்து மூலம் (ஆங்கிலத்தில்) சமர்ப்பிக்க முடியும்.

06) சாரதி அனுமதிப் பத்திரம் பெற விரும்பும் அங்கவீனர்களும் தமது கோரிக்கைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

07) சக்தியற்றோர் உபயோகிக்கின்ற இதுவரை பதிவு செய்யாத வாகனங்களுக்குரிய உரிமையாளர்களும் தமது கோரிக்கைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

08) வேறு எந்தவொரு மோ. போ. திணைக்கள செயற்பாடுகள் பற்றியும் தங்களது பிரச்சினைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

(சோ)

# மூன்றாம் தரப்பாக முஸ்லிம்கள் பங்குபற்றுவது பேச்சுவார்த்தைகளைப் பலவீனப்படுத்திவிடும்

## முஸ்லிம் பா.உ. சந்திப்பில் இரா. சம்பந்தன்

(கொழும்பு)

**எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவது தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்துக்கும் தமிழ்க் கூட்டமைப்புப் பிர திநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு ரேணுகா வேஹாட்டலில் இரவு 8.30 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெற்றது.**

தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகளின் போராட்ட பலமே காரணமாகும். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பேச்சுக்களில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக விடுதலைப்புலிகள் பங்குபற்றும் போது மூன்றாந்தரப்பாக முஸ்லிம்கள் பங்குபற்றுவது பேச்சுவார்த்தையைப் பலவீனப்படுத்தி குழப்பிவிடும் என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சுட்டிக்காட்டியதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். இதே வேளை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், விடுதலைப் புலிகளும் பேசுவதன் மூலம் முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை தாம் விடுதலைப்புலிகளிடம் எடுத்துக்கூற இருப்பதாகவும் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் உறவை குலைக்க சில கட்சிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் சிக்கி சமாதான முயற்சிகளைப் பலவீனப்படுத்தாது ஒன்றிணைந்து சமாதானத்தை ஏற்படுத்த இருதரப்பும் பாடுபடுவதென தமிழ்-முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாகவும் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பு சார்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, என்.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன், குமரகுருபரன் துரைரத்தினசிங்கம் ஆகியோரும் முஸ்லிம் பாராளுமன்றக் குழுவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், நூர்தீன் மசூர், பசீர் சேகு தாவுத், எம்.எஸ்.திமர்தௌபீக், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் கலந்து கொண்டனர். (32)

## அமைச்சர் வருகை

நெதர்லாந்து அபிவிருத்தி அமைச்சர் 2நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நவம்பர்மாதம் 3ந்திகதி இலங்கைவரவுள்ளார். சமாதானமுயற்சிகளுக்கு பலமான தனது ஆதரவை வழங்கும் முகமாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்பேரிலும் இவர் வருகைதரவுள்ளார்.

# இயல்பு வாழ்வை வலியுறுத்தி மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமது மீள்குடியமர்வுக்கும் இயல்பான தொழிலுக்கும் வழி உருவாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மறவன்புலோ சலவை தொழிலாளர் சங்கம் மகஜர்களை அனுப்பிவைத்துள்ளது.

1995ஆம் ஆண்டிலிருந்து இப்பகுதியை ஆக்கிரமித்து வைத்துள்ள படையினர் தம் அதி உயர் பாதுகாப்பு வலய பிரகடனம் மூலம் இங்கு வாழ்ந்த மக்களை ஓரம் கட்டியதுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை அனுப்பிவைத்துள்ளனர்.

இயல்பு வாழ்வு, மீள்குடியேற்றம், தொழில் உரிமை என கோரிக்கைகள் அடங்கிய இம் மகஜர்கள் பிரதமர்,மனிதஉரிமைகள் ஆணைக்குழு,கண்காணிப்புகுழு வெளிநாட்டுத் தூதரகங்கள், பாதுகாப்பு அமைச்சு, ஐநா உயர்ஸ்தானிகரகம் என்பனவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (33)

# கூட்டணி அவசியமானது!

## - அநுரா மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

"நாட்டினைப் பாதுகாத்தல்" என்பதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டு மக்கள் விடுதலை முன்னணிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே கூட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டுமென்று பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் அநுராபண்டார நாயக்க கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்புத் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளில் சற்றுத் தடை ஏற்பட்டுள்ளபோதிலும், அந்த வெற்றி இலக்கைஅடைய முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.மாத்தறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# நெல் மூடைக்கு கீழிருந்த பாம்பு யுவதியைத் தீண்டியது

மல்லாவி ஒட்டறுத்தகுளம் பகுதியில் வசித்து வரும் சிவபாதசுந்தரம் ராதிகா (வயது-21) என்னும்யுவதிதனதுவீட்டுக்குள் இருந்த உடுபுடைவைகளை எடுக்கச் சென்ற வேளை பாம்புக்கடிக்கு இலக்கானார். மேற்படி சம்பவம் கடந்த திங்களன்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது. வீட்டுக்குள் அடுக்கப்பட்டிருந்த நெல்மூடைக்கு கீழிருந்த பாம்பினால் இவர் கடியுண்டார். அவ்விடத்தில் மயக்கம் அடைந்த அவர் உறவினர்களினதும் அயலவர்களினதும் உதவியுடன் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.(24)

# ஓமந்தையில் வெடிபொருள் அச்சுறுத்தலால் மீள்குடியமர்ந்த மக்கள் பெரும் விசனம்!

(செட்டிகுளம்)

மீளக்குடியமர்ந்தும் விவசாயம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருப்பதாக வவுனியா ஓமந்தைப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்கள் தற்போது உள்ள போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டனர். ஓமந்தையில் சில கிராமங்களில் மீள மக்கள் குடியமர்ந்துள்ள போதிலும் பல கிராமங்கள் குடியமர்த்தப்படாமல் உள்ளன.

மீளக் குடியமர்த்தப்பட்ட கிராமங்களிலும், வயல் வெளிகளிலும் தொடர்ந்தும் வெடிபொருட்களின் அச்சம் உள்ளது என்றும் இதன் காரணமாக இந்த முறை தாம் விவசாயம் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

விவசாயத்திற்கு உரிய காலம் முடிவதற்குள் உரிய நடை முறையினை உரிய அதிகாரிகள் செய்து தர வேண்டும்என்று மீளக்குடிய மர்ந்துள்ள மக்கள் கோரியுள்ளனர். (21)

# மட்டக்களப்பில் 65 %திற்கு மேலானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்க்கை

## மாவட்ட அரச அதிபர் தகவல்

ஐக்கிய நாடுகள் சபையின் நிதி உதவியுடன் போர் நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்டவர்க ளுக்குப்போசாக்குசத்துள்ள உணவுப் பண்டங்கள் உலக உண வுத் திட்டம் கிழக்கு மாகாணத் திற்கும் விஸ்தரிக்கப் படவுள்ள தாக உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் செப்டெட்டிக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உரிய நேரத்தில் மக்களுக்கான உதவித்திட்டங்கள் கிடைப்பதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதால், உலக உணவுத்திட்ட நடவடிக்கைகள் மூலம் மக்கள் இலகுவில் பயனடைய முடியும் என மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மோகனகுருசாமி கூறியுள்ளார்.

அத்துடன் இம்மாவட்டத்தில் 65சதவீதத்திற்கு மேற்பட்டோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மன்னாரில் கணினிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்



(அலுவலக செய்தியாளர்)

மன்னார் மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடைமுறைப் படுத்தப்பெற்று வரும் கணினிப் பயிற்சி நிலையத்தின் முதலாம் கட்ட மாணவர்களுக்கான சான் றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

இரண்டாம் கட்டப் பயிற்சியாளர் கோகிலராசா தலைமையில் பயிற்சி நிலையத்தில் பகல் 11 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மடுப் பிரதேச செயலர் மரியதாஸ்,அடம்பன் பங்குத்தந்தை அருட்திரு ஞானாதிக்கம், அடம்பன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பிறேம், மன்னார் மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகத் தலைவர் மரியநாயகம் குரூஸ், மடுவலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கிராமசேவை அலுவலர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலையடுத்து தமிழீழ தேசியக் கொடியினை அடம்பன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பிறேம் ஏற்றிவைக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை கழக மன்னார் மாவட்ட பணிப்பாளர் சீசஸ் ஏற்றிவைத்தார்.

உரைகளினையடுத்து முதலாம் கட்ட கணினிப் பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையைத் தடுக்க உயர்தர மாணவர்களால் விழிப்புணர்வூட்டல்!

(அலுவலக செய்தியாளர்)

பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையினால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அதன் பாவனைகளை தவிர்த்துக் கொள்ளும் முகமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு கருத்தரங்குகளை கிளிநொச்சி இந்துக்கல்லூரி க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவ மாணவிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 20ஆம் திகதிமுதல் கல்லூரி ஆசிரியர் க.ஜெகந்தன் வழிகாட்டலில் க.பொ.த. உ/த (2005) மாணவ, மாணவிகள் மேற்படி விழிப்புணர்வு நடவடிக்கையினை திருநகர் கிராமத்தில் ஆரம்பித்துள்ளதுடன், அக்கிராமத்து மக்களுக்கு பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையினால் மக்களுக்கும் மண்வளங்களுக்கும் ஏற்பட்டு வரும் தீமைகளை விளக்கிக் கூறி வருவதுடன், இதனால் ஏற்படவுள்ள பாரிய தாக்க விளைவுகளை சுட்டிக்காட்டி பிளாஸ்ரிக் பாவனையினை இயன்றவரையில் தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் அறிவுறுத்தி வருகின்றனர்.

கிளி/ இந்துக்கல்லூரியைச் சேர்ந்த க.பொ.த. உயர் தரமாணவன் இ.அரிகரன் தலைமையில் சக மாணவ மாணவிகளான கு.வாசுதேவன், ச.சர்மிலன், சு.பிரதீபன், இ.கிசாந்தினி, ஸ்ரீ.சிவதர்சினி ஆகியோர் மேற்படி பிளாஸ்ரிக் பாவனையின் பாரிய பின் விளைவுகள் குறித்து கிராம ரீதியாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ)



அதிபர் ,ஆசிரியருடன் ,மாணவர்கள்

# க.பொ.த.(சா/த)பரீட்சை டிசம்பர் -1ல் ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை எதிர் வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இம்முறை மேற்படி பரீட்சைக்கு மூன்று இலட்சத்து எண்பதாயிரம் பாடசாலை பரீட்சாத்திகள் தோற்றவுள்ளனர்.

தனிப்பட்ட பரீட்சாத்திகள் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் தோற்றுகின்றனர். இதேவேளை டிசம்பர் மாதம் ஏழாம் திகதி நடைபெறவுள்ள 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு 3இலட்சத்து 10ஆயிரத்து நான்கு மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

# வெட்டிய மரத்தினுள் நசிந்து நபரொருவர் பரிதாப மரணம்

(செட்டிகுளம்)

மரம் வெட்டியபோது மரம் விழுந்து நபர்ஒருவர்பரிதாபமாக நசிந்து இறந்தார். செட்டிகுளம் முசல் குத்தி காட்டுப்பகுதியில் விறகு மரம் வெட்டிக் கொண்டு இருந்தபோது மரம் விழுந்ததில் கிருஸ்தவ குளத்தைச் சேர்ந்த 40 வயதான கனகசிங்கம் சிவபாலன் என்பவரே இறந்துள்ளார்.

20ஆம் திகதி மாலை 5.30 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.முசல் குத்தி காட்டுப்பகுதியில் களவாக நடைபெற்ற இந்த மரம் வெட்டும் சம்பவம் தொடர்பாக இதன் உரிமையாளர் என்று நம்பப்படும் நபர்ஒருவரினைசெட்டிகுளம் பொலிசார் கைதுசெய்துள்ளனர். இயற்கை வளமான காட்டினை சில தனி நபர்கள் தங்களின் சுய நலனுக் காகத் திட்டமிட்டு சில அதிகாரிகளின் உதவியுடன் அழித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(21)

# அடிப்படைக் கல்வியை தொடரமுடியாது நூற்றுக்கும் மேலான சிறார்கள் அவலம்!

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த150 இற்கு மேற்பட்ட சிறார்கள் அடிப்படைகல்வியைதொடரக்கூடமுடியாத நிலையில் வாழ்ந்து வருவதாக அப்பகுதி கிராம சேவையாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டதரவுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி பகுதியில் கிழக்கரியாலை, கொழும்புத்துறை மற்றும் தீவகப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் மீள குடியேறமுடியாத நிலையில் மேற்படி கிராமத்தில் தங்கியுள்ள 300இற்கும்மேற்பட்டகுடும்பங்களைச் சேர்ந்த இச்சிறார்களே இவ்வாறு தம் அடிப்படைக் கல்வியைக் கூட தொடரமுடியாது துன்பப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து இப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள் பல உதவும் அமைப்புக்களுக்குச் சுட்டிக் காட்டியும் அவர்கள் சில கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு விட்டு அலட்சியம் காட்டிவருவதால் இம் மாணவர்களின் கல்வியும் எதிர்காலமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. (33)

# ஹெரோயின் கடத்திய இருவர் முருங்கன் பகுதியில் கைது!

முருங்கன் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒரு கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் போதை வஸ்து தடுப்புப் பிரிவினர் திடீரென மேற்கொண்ட சோதனையின் போதே மன்னாரிலிருந்து கொழும்பு சென்ற பஸ்ஸில் பயணம் செய்த இருவரிடமிருந்தே இந்தக் ஹெரோயினை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி கூறியுள்ளார்.

சந்தேக நபர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

## சூழல்பாதிப்பு

திருகோணமலை துறைமுக அதிகாரசபையைச் சேர்ந்த நூறிற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடுமையான சுற்றாடல் பாதிப்பினால் ஆபத்துக்குள்ளாகியுள்ளனர்.

டோக்கியோ சீமெந்து தொழிற்சாலையிலிருந்து வரும் தூசியினால் சுற்றாடல் மாசுபடுவதாக அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். தூசு காற்றுடன் கலப்பதால் சுற்றாடலிலுள்ள தொழிலாளர்கள் பாதிப்படைவதாக கூறப்படுகிறது.

# காணவில்லை



**சீவரட்ணம் துசாகரன்**

**வயது -20**

**புங்குடுதீவு, 7ஆம் வட்டாரம்**

மேற்படி படத்தில் இருப்பவர் 9ஆம் மாதம் 11ந் திகதியன்று வட்டக்கச்சியிலிருந்து புங்குடுதீவு சென்றவர் இன்னும் வீடுபோய் சேரவில்லை. இவரைப்பற்றிய விபரம் அறிந்தோர் மக்கள் சுவையகம், சந்தையடி, வட்டக்கச்சி எனும் முகவரிக்கு தகவல் தரும் படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**சண்முகலிங்கம்,**
**மக்கள் சுவையகம்,**
**வட்டக்கச்சி.**

(3115)

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதிக்கு கீழ் வரும் பணிநிலைக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் தங்களது தன் வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 30.10.2003ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

**கல்வித்தகைமை:-** க.பொ.த.(உ/தரம்) அல்லது க.பொ.த.(சா/தரத்துடன்) ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-** பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
வருவாய்பகுதிச் செயலகம், கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:-** 31.10.2003 காலை 10. 00மணி

**நேர்முகத்தேர்வு நடைபெறும்இடம்:-** வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்.சாலை, கிளிநொச்சி.

குறிப்பு:- நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது . நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி-8673)

# பதின் மூன்று ஆண்டுகள் நீங்காத நினைவில்

தாயின் மடியில் 9 - 04 - 1968



தாயக மண்ணில் 23 - 10 - 1990

**கப்டன் றேமன்**
**இராமானுஜம் சீதாராம்**
**[புலோலி கிழக்கு, பருத்தித்துறை]**

பதின்மூன்றாண்டுகள் சென்றாலும் உம்
நினைவுகள் எம்மிலிருந்து
எளிதில் அகலப் போவதில்லை
எம் உள்ளம் என்றும் தவிக்குதப்பா
தன் நாட்டுக்காய் தன் மண்ணுக்காய்
உரமாகிய றேமனே
நீகொண்ட இலட்சியம்
நாமும் தோழர்களும் சுமந்து நிற்கிறோம்
நீ விண்ணுலகிலே நிம்மதியாக உறங்கு.

என்றும் உன் நீங்காத நினைவில்
**குடும்பத்தினர்.**

த-மு:
துணுக்காய் சாலை ,
துணுக்காய்.
(சி-8705)

# 16ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



25-09-1917.அன்னை மடியில்28-03-1941
20-10-1987.அந்நியர் அழிப்பு:20-10-1987



**எஸ். என். கந்தையா** (சமாதான நீதவான், உத்தியோகப் பற்றற்ற நீதிபதி, இளைப்பாறிய அதிபர்)

**என்.கே.தர்மலிங்கம்MA.DIP** (பகுதி நேர விரிவுரையாளர் யாழ். வளாகம், கல்லூரி அதிபர்.)

பிறப்பிடம் : நெடுந்தீவு.
வதிவிடம் : கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

எங்கள் குடும்ப விருட்ச வேர்கள்
எம்மை தாங்கிய தலைவர்கள் - இவர்கள்
தந்தை, தலைமைந்தன் இருவரும் சாய்ந்தனர்
சிந்தை நொந்து எம் இணையும் அழுகுதே
அறிவுச் செல்வம் ஊட்டி மகிழ்ந்த - பாடசாலை
அதிபர்கள் இவர்கள் அணையாச் சுடர்கள்
அதனாலேனோ அணைந்தனர் கல்லூரியில்
சேவையிலும் இவர்கள் சிறந்த வல்லோர்
அந்தோ எங்கள் எம் இதயம் ஏங்குதே!

இந்திய இராணுவம் இழைத்த கொடுமையால்
இந்த மண்ணின் இரத்த ஆறு ஓடிய நாட்களில்
சொந்த மண்ணில் எம் சொந்த தலைவர்கள்
செந்நீர் சிந்தி அந்த மாகிய
அந்த நாள் மறைவுகள் ஆறுமா? நெஞ்சில்
ஆண்டுகள் ஈரெட்டு கடந்தன - ஆயினும்
ஆறாத்துயரம் நெஞ்சில் கனக்குது
நீண்டு நிலைத்து எம் நினைவில் வாழ்ந்திடும்
நீதி தலைவர்கள் நீத்த நாள் நினைவு அஞ்சலி

திதி – 23–10–2003 எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டு கிருத்தியத்திலும் கலந்து அன்னார்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் வாடும்**
**மனைவிமார், பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

க. தர்மசூரியர், தர்மநாயகம், கோசல்யா,
இல. 603, இராமநாதபுரம், கிளிநொச்சி.

(சி-8672)

# இரண்டாமாண்டு நினைவுத் தடத்தில்...

எமது சொத்தாய் 20 - 06 - 1981



தேசத்தின் வித்தாய் 23 - 10 - 2001

**மாவீரன் 2ஆம் லெப். ஈழராசா**
**(தென்றல் மாறன்)**
**(செல்லத்தம்பி - நீதிவளவன்)**
**வளலாய் - யாழ்.**


குமுறிப்புகையும் எரிமலைபோலெம் நெஞ்சக்கனலை
வரிவரியாய் வடித்தெழுதமுடியாதுன்காதை தரித்து நிற்கத்
திரிதிரியாயெரிந்து உளம் தீந்தமிழ் தீயோடு சங்கமித்து
நிலைத்து நிற்கத் தானாது விழிகளிங்கு வடிக்கும் நீரை நிழற்
படமாயானாலும் பார்க்கும் வலு உனக்குளதென நோக்கி
அழுது தொழுகின்றோம். ஆற்றுதற்கும் தேற்றுதற்கும் யாருளர்?
விழுதாகி வித்தாகி ஆண்டிரண்டு ஆச்சு மகனே மனமதில் மாறாப்
பெரும் வடுவாயுன் பிரிவு ஆனாலும் மாவீரர் தேசத்தில்
தேசுடனே நீ திகழக் காண்கின்றோம் கலங்கும் உளத்தோடு.

உன்துயரில் தோய்ந்த
**அம்மா, அப்பா,தம்பி,**
**தங்கை.**

பதிப்பகவளாகம்
மல்லாவி.
(3110)

அமெரிக்காவினதும், பிரிட்டனதும் தலைமையில் நடைபெற்ற ஈராக்கிய யுத்தம் உலகை தற்போது பாரிய பின்னடைவுக்கு இட்டுச் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது. அவை ஈராக் மீது யுத்தத்தை ஆரம்பித்ததற்கான தகுந்த காரணங்கள் இதுவரையிலும் நிருபிக்கப்படவில்லை.

சதாம் ஹுசைன் இல்லாத ஈராக் அவரின் நிர்வாகத்தின் கீழிலிருந்த ஈராக்கைவிட பன்னூறு மடங்கு துன்பத்துக்குள்ளாகியுள்ளது. யுத்தத்தால் சதாமின் ஆட்சி கவிழ்ந்தது உண்மையே. ஆயினும், அமெரிக்காவின் புஷ் நிர்வாகத்துக்கும் பிரிட்டனின் ரொனி பிளேயர் நிர்வாகத்துக்கும் ஏற்பட்ட பின்னடைவுகள் அதைவிட மோசமாகியுள்ளன.



போக்கினால் அன்றி மக்களின் செல்வாக்கினாலாகும். விசேடமாக அவர் பாராட்டுக்குரியவரானமை மிகுந்த செயல்வீரர் என்ற வகையிலேயே.

சிறந்த சட்டத் தரணியாகிய இளம் பிளேயரின் ஆளுமை அவரை புகழின் உச்சிக்கு ஏற்றியது. அத்தோடு காலம் காலமாக தச்சரின் ஆட்சியில் சலிப்புற்றிருந்த மக்களுக்கு மாற்றம் தேவை எனக் கருதி பிளேயரிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்தனர். அதனால் அவருக்கு மேலும் பலம் கூடியது.

தமது முதலாவது நிர்வாக காலகட்டத்தில் தமது நிலையை மேலும் பலப்படுத்த அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. அக்காலத்தில் அமெரிக்காவில் சனாதிபதி பில் கிளின்டனின் நிர்வாகம் நடைபெற்றது. அவருக்கும் உலக மட்டத்தில் சிறந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது. இதனால், இரு தலைவர்களினதும் செல்வாக்கு நிலைத்து நின்றது. இதனால், உலகையே தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவது இவர்களின் எண்ணமாகியது. ஆயினும், அதில் மாற்றம் ஏற்பட்டமை கிளின்டனின் நிர்வாகம் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு கீழ் வந்தமையினாலாகும். அதாவது, புஷ் நிர்வாகம் கடும் போக்கான யுத்த முனைப்புடனான வழிக்குச் சென்றது.

மத்திய கிழக்கு, சீனா வடகொரியா யுத் தத்தை ஆரம்பிக்க வேண்டுமா என்ற கேள்வியே - அப்போது மேலெழுந்து நின்றது.

யுத்தத்திற்கான காரணம் என்ன என்ற வினாவும் அப்போது தோன்றியது. அதற்கு ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பது காரணமாகக் கூறப்பட்டது. இதன் போது பிரிட்டனின் உளவுச் சேவையின் அறிக்கை அமெரிக்காவின் அறிக்கையைவிட ஒருபடி மேலாகச் சென்று ஈராக்கை அச்சுறுத்தியது.


ஆயினும், ஐ.நா.வின் ஆயுதக் கண்காணிப்புக்குழுவிற்கு இடமளிக்காமல் அமெரிக்க-பிரிட்டன் படைகள் யுத்தத்திற்குக் கிளம்பின. அவை ஈராக்கின் நாசகாரி ஆயுதங்களைக் களைந்து ஈராக் மக்களை மீட்டெடுக்கப்போவதாகக் கூறிக் கொண்டன.

யுத்தத்திற்கு கிளம்புவதற்குப் பிளேயர் பாராளுமன்றத்தின் அனுமதியைக் கோரிய போது அவரது கட்சியினர் பலத்த எதிர்ப்பு தெரிவித்தனர். றொபின் குக் போன்ற தலைவர்கள் இராஜினாமா செய்தனர். எனினும், யுத்தத்துக்குப் பின்னும் ஈராக்கிலிருந்து நாசகார ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை. முன்னாள் ஆயுதப் பரிகரணக் குழுவின் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் ஈராக் தம்மிடமிருந்த பேரழிவு ஆயுதங்களை பல வருடங்களுக்கு முன்பு அழித்துவிட்டதற்கான சான்று கிடைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

வருகின்றது. பிளேயரின் கட்சியைச் சேர்ந்தோரிலும் 41 வீதமானவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அண்மையில் நடைபெற்ற கருத்துக் கணிப்பு மூலம் இது தெரிய வந்துள்ளது.

பிளேயர் தமது கட்சியின் கூட்டம் ஒன்றின்போது பிரிந்து சென்ற கட்சியை மீண்டும் ஒன்றிணைக்க முயன்றுள்ளார். ஈராக் விவகாரத்தில் தலையிட்டமையே கட்சி பிரிந்து சென்றதற்கான காரணம் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். அத்துடன் அவர் இந்தநிலை முடிவிற்குக் கொண்டுவந்து எதிர்க் கட்சிகளின் விமர்சனங்களுக்கு முகம் கொடுக்கும் காலம் வந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அதேநேரம் யுத்தத்திற்கு தயாராவதற்குத் தாம் எடுத்த முடிவு வருத்தப்பட வேண்டியதில்லை எனவும் மீண்டும் யுத்தத்திற்குச் செல்லும் முடிவையும் அவர் மாற்றிக் கொள்ள மாட்டார் எனவும் கூறியிருக்கின்றார்.

இதிலிருந்து பிளேயர் தமது நிலையை மாற்றிக் கொள்வதற்கான அறிகுறிகள் தென்படுவதாக இல்லை. எனினும், அவர் தேர்தலில்



# ஈராக்கிய தலையீட்டால் அஸ்தமிக்கும் பிளேயரின் எதிர்காலம்?

அதிலிருந்து மீளுவதற்கு வாஷிங்டனும், லண்டனும் மிகுந்த முயற்சி செய்து வருவதும் தற்போது வெளிப்படை.

இங்கு சனாதிபதி புஷ்ஷைவிட பிரிட்டனின் பிரதமர் ரொனிபிளேயரே அதிகமாக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு பிளேயரின் அரசியல் நிலை இருக்கின்றது. அவரின் பலமான ஆயுதமாக இருந்தது மக்களின் ஆதரவும், நம்பிக்கையுமே.

இதற்கு ஆறரை வருடங்களுக்கு முன்பு அதிக புகழ் வாய்ந்த கன்ஸ வேடிவ் கட்சியைத் தோல்வி காணச் செய்து அதிகாரத்தைக் கைப்பற்றவும், தேர்தலில் சிறப்பாக வெற்றிபெறவும் தொழில் கட்சி ஏற்படுத்திய தீவெடித்தது பிளேயரினாலேயே. அதற்கு முன் கன்ஸவேடிவ் கட்சி 18 வருடங்கள் அதிகாரத்திலிருந்தது. அக்காலத்தில் இரும்புப் பெண் என வர்ணிக்கப்படும் மாக்ரட் தச்சரின் தலைமைப் பின்னர் பிரச்சினைக்கு முகம் கொடுத்து அவரது அரசியல் சீர் குலைந்த போது மக்களை திரட்டி வெற்றிபெற பிளேய ருக்கு வாய்ப்பு கிடைத்தது. அண்மைக்காலங் களில் அவர் சிறந்த தலைவராக எல்லோ ராலும் புகழப்பட்டார். அது தச்சரின் கடும்

ஆகியவற்றின் பிரச்சினைகளில் புஷ் நிர்வாகம் கையாண்ட விதம் கிளின்டனின் நிர்வாகம் கையாண்ட விதத்துக்கு மாறானதாகத் தோன்றியது. அமெரிக்காவின் நீண்டகால நண்பனாக பிரிட்டன் இருக்கின்ற நிலையில் சர்வதேச மட்டத்தில் அவை ஒன்றைவிட்டு ஒன்று பிரிய முடியாத நிலையை உருவாக்கிக் கொண்டன. அன்றியும் சர்வதேச பிரச்சினைத் தீர்வில் இரு நாடுகளினது கருத்தும் ஒன்றாகவே இருக்க வேண்டுமென அவை எண்ணின.

ரொனிபிளேயர் இரண்டாவது முறையும் அதிகாரத்திற்கு வந்தது மிக அதிகமாக மக்கள் ஆதரவுடனேயே . அதனால் பாராளுமன்றத்திலும் அரசியலிலும் தொழிற்கட்சிக்குப் பலம்கூடியது. அவ்வாறான பலத்தை அவர் பரீட்சித்துப் பார்க்க எண்ணினாரா என சந்தேகம் தோன்றுகின்றது. அன்றியும் ஈராக் விவகாரத்தில் பிளேயர் மட்டுமன்றி அமெரிக்காவையும் தலையிட வைத்தமையும் ஒன்று.

உண்மையில் ஈராக் விவகாரத்தில் பிரிட்டன் தலையிடுவதை ஏனைய அரசியல் கட்சிகள் விமர்ச்சித்தன. சர்வாதிகாரியான சதாமை அதிகாரத்திலிருந்து இறக்க வேண்டுமா என்ற விவாதத்தைவிட அதனால் ஏற்படும் நாசகார

இந்நிலையில், பிளேயருக்கு மேலும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. யுத்தத்திற்கான காரணம் ஈராக்கின் பேரழிவு ஆயுதங்கள் என்று கூறியமை பொய்யாகிவிட்டது. யுத்தத்தினால் பல இளம் படை வீரர்களை பலியாக்கியமைக்கான காரணத்தை பல சக்திகள் அறியத் தருமாறு கேட்டபோது பிளேயரின் நிலை மேலும் சிக்கலாயிற்று. மேலும் கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கையைப் புறக்கணித்தார் என்ற பாரிய குற்றத்தையும் அவர் ஏற்க நேரிட்டது. அதனை வெளியிட்ட ஆயுத சோதனையாளர் டேவிட் கெலியும் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். இவையனைத்து வழிகளாலும் பிரதமர் பிளேயரின் அரசியலை ஆட்டம் காண வைத்தது. பொய்யான கருத்தைக் கூறி யுத்தத்தில் மக்களை கேடயமாக வைத்து படை திரட்டியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

இவற்றைவிட அண்மையில் தொழிற் கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெற்றுள்ளது. வரலாற்றில் இல்லாத அளவில் இது விமரிசையாக நடைபெற்றுள்ளது. ஈராக் யுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் குழுக்கள் பிளேயருக்குத் தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இதிலிருந்து 61வீதத்தினர் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரிய

வெற்றி பெற்று பிரதமராக வரும் நோக்கிலேயே இருக்கின்றார். இந்நிலையில் ஆறரை வருடகால அவரின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற இடைத் தேர்தல் ஒன்றில் அவரது கட்சி தோல்வி கண்டுள்ளது மட்டுமன்றி நிதியமைச்சராகவிருந்த கோடின் புஷின் என்பவர் பிரதமர் பதவிக்குக் கண் வைத்துள்ளார். இவையாவும் பிளேயரின் அரசியலுக்கு ஓர் அச்சுறுத்தல் போன்று தெரிகிறது. இவற்றுக்கு மேலாக சுகாதாரம், உயர் கல்வி அமைச்சுக்களில் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ள புனரமைப்பு நடவடிக்கைகளும் கட்சியின் ஆதரவுக்குள்ளாகாமல் விட்டமை பிளேயருக்கு மேலும் தலையிடியைத் தந்துள்ளது.

இப்பிரச்சினைகளுக்கு மத்தியிலும் பிளேயர் தமது பலத்தை நிருபிக்க முயற்சி செய்கிறார். அவரின் சிந்தனை இழந்த மக்கள் ஆதரவை மீண்டும் பெற்றுக் கொள்வதே. உயர்ந்த தலைவர் எனினும் தற்போதைய விமர்சனங்களுக்கிடையில் மீண்டும் தலையெடுப்பது பிளேயருக்கு மிகுந்த கடினமானதாகவே இருக்கும்.

**வடிவேல்**

# வதிவிட அனுமதியைப் பெற்றுக்கொள்ள புங்குடுதீவில் கடற்படையினர் நிர்ப்பந்தம்

## - பொதுமக்களின் விபரங்கள் சேகரிப்பு

யாழ் புங்குடுதீவில் இப்பொழுதும் அங்கு வாழும் மக்கள் சிறிலங்கா கடற் படையினரால் வதிவிட அனுமதி பெறவேண்டுமென கட்டாயப் படுத்தப்பட்டுள்ளனர்.

போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னரும் இந்த நடைமுறை இங்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால், இங்கு மீள குடியேறச்செல்லும் மக்கள் சிறிலங்கா கடற்படை அலுவலகம் சென்று அவர்களின் விசாரணைகளுக்கு உட்பட்டு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர் .

புங்குடுதீவில் வாழும் சகல மக்கள் தொடர்பான விபரங்களையும் கடற்படையினர் திரட்டி வருகின்றனர். வதிவிட அனுமதி இல்லாதிருப்போர் சிறிலங்கா கடற்படையினரால் அலுவலகத்திற்கு அழைக்கப்படுகின்றனர் .

அதே வேளை 3 மாதங்களுக்கு ஒரு முறை வதிவிட அனுமதி புதுப்பிக்கப்படவேண்டும் என்றும் கடற்படையினர் கட்டளை பிறப்பித்துள்ளனர். போர் நிறுத்த உடன்பாட்டிற்கு மாறாக புங்குடுதீவில் இந்த நடைமுறைகுறித்துதீவக எழுச்சி பேரவை சங்கமத்தில் புங்குடுதீவு மக்கள் குரல் எழுப்பினர். இந்த வதிவிட அனுமதி நடைமுறை காரணமாக புங்குடுதீவில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான மக்களே மீளகுடியமர்ந்துள்ளனர்.

# சிறிலங்கா – பெல்ஜியமிடையே வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

சிறிலங்காவிற்கும் பெல்ஜியத்துக்குமிடையிலான வர்த்தகம் மற்றும் கப்பல் போக்குவரத்து ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் உடன்படிக்கை நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இரு நாடுகளின் பிரதிநிதிகளைக்கொண்ட குழு கப்பல் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பான மதிப்பீடு செய்துள்ளது. இவ் உடன்பாட்டில் சிறிலங்காவின் சார்பில் துறைமுக அபிவிருத்தி கப்பல்துறை அமைச்சின் செயலாளரும், பெல்ஜியத்தின் சார்பில் கப்பல் துறை மற்றும் போக்குவரத்து சேவைகளின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

# நிர்வாக சேவை வெற்றிடங்கள் இவ்வாண்டிற்குள் நிரப்பப்படும்

இலங்கையின் அரச நிர்வாக சேவையிலுள்ள 614 வெற்றிடங்களும், இவ்வாண்டிற்குள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகளைப் பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சு எடுத்து வருகின்றது.

இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு பிரதமருக்கும், அமைச்சரவைக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அறிவுறுத்தல்களுக்கமையவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்க நிர்வாக சேவையிலுள்ள 614 பதவி வெற்றிடங்களில் 177 பதவிக்கான நியமனத்தை வழங்குமாறு 2001ஆம் ஆண்டின் அமைச்சரவை அனுமதி இதுவரை நடைமுறைப்படுத்தப்படாதுள்ளமை பற்றி இலங்கை நிர்வாக சேவைச் சங்கத்தின் தலைவர் எஸ். ரணுகே சனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

# அளவைகள் திணைக்களத்தில் விரைவில் 3000 பட்டதாரிகள் நியமனம்!

## – அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் அளவைகள் திணைக்களத்தினூடாக 3000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு கூறியுள்ளது.

வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்திற்காக திறைசேரியில் இருந்து நிதியைப்பெறமாட்டோம், வர்த்தக நுகர்வோர் அமைச்சின் மூலமாகவே நிதியைப்பெற்று திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியுள்ளார்.

அதே நேரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதன்மூலம் பட்டதாரி மற்றும் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பணிநிலை வேண்டுகை

வன்னியில் நன்மதிப்புடன் இயங்கிவரும் முன்னணி நிறுவனமான பாண்டியன் வாணிபத்துக்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு ஆளணி தேவைப்படுகிறது. தகைமையும் பட்டறிவுமுடையவர் வேண்டுகைகளை அனுப்பி பணியை பெற்றிட முனையவும்.

| பணிநிலை | கல்வித்தகைமை | பட்டறிவு | பால் | அகவை |
|---|---|---|---|---|
| மேற்பார்வையாளர் | க.பொ.த. (உ/த) சித்தி. | முன்னணிநிறுவனம் அல்லது பொதுத்துறை நிறுவனத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு. | ஆண் | 23-40 |
| கணனி இயக்குநர் (கணக்குப்பதிவாளர்) | க.பொ.த(சா/த) இல் ஆங்கிலம்,தமிழில் திறமைச்சித்தி உட்பட தேர்ச்சிபெற்றிருத்தல். அல்லது கணனிக்கல்வியில் டிப்ளோமா பட்டம் அல்லது MS office இல் தேர்ச்சி | கணனித்துறையில் 2வருடம் பணியாற்றிய முன் பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| எழுதுநர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் விரும்பத்தக்கது. | பொதுத்துறை அல்லது தனியார்துறை நிறுவனத்தில் எழுதுநர் பணியில் ஓராண்டுக்கு குறையாத பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| களஞ்சியக்காப்பாளர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் விரும்பத்தக்கது. | முன்னணி நிறுவனம் ஒன்றில் களஞ்சியக்காப்பாளர் பணியில் 2 வருடத்திற்கு குறையாதபட்டறிவு. | ஆண்கள் | 20-40 |
| தொழில்நுட்பவியலாளர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. மின்னியல், இலத்திரனியல் கற்கைநெறி ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கற்று தேர்ச்சிச்சான்றிதழ் பெற்றிருத்தல். | மின்னியல், இலத்திரனியல் துறைசார் தொழிலில் 2 வருடத்திற்கு குறையாத பட்டறிவு. | ஆண்கள் | 25-40 |
| விற்பனையாளர் | க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். | முன்னணி நிறுவனம் ஒன்றில் அல்லது நடமாடும் வாணிபத் தொழிலில் 2 ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| பாதுகாவலர் | க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். | பொதுத்துறை அல்லது தனியார்துறை நிறுவனத்தில குறிப்பிட்ட பணியில் 3ஆண்டுகள் பட்டறிவு பெற்றிருத்தல். | ஆண்கள் | 18-40 |
| உணவு வழங்குநர் (உபசரிப்பாளர்) | 9ம் வகுப்பு கற்றிருத்தல் | முன் பட்டறிவு விரும்பத்தக்கது. | இருபாலரும் | 18-40 |
| சிற்றூழியர் | — | குறித்தபணியில் குறிப்பிடத்தக்க அனுபவம் விரும்பத்தக்கது. | இருபாலரும் | 18-40 |
| சமையல் உதவியாளர் | — | குறித்தபணியில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் | இருபாலரும் | 18-40 |
| சுத்திகரிப்புத் தொழிலாளர் | — | குறித்தபணியில் முன் அனுபவம் | இருபாலரும் | 18-40 |

⇨ சம்பளம் தகைமைக்கேற்ப நேரில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும்.

⇨ பட்டறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
பட்டறிவு இல்லாதவர்களும் வேண்டுகைகளை செலுத்தவும்.

⇨ வேண்டுகை அனுப்பவேண்டிய கடைசி நாள் 05.11.2003.

⇨ வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி :- விளம்பர இல-600,
ஈழநாதம் பணிமனை,
யாழ்சாலை, கிளிநொச்சி.

⇨ வேண்டுகை அனுப்பியவர்கள் அனைவரும் நேர்முகத்தேர்வுக்கான நாள், நேரத்தைஅறிவதற்கு 07-11-2003ஆம் நாள் வெள்ளிநாதத்தை தவறாது பார்க்கவும்.

[சி—8538]

ஆளுகை
**பாண்டியன் வாணிபம்**



## சிந்தனைக்கு

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-10-2003

# சமாதான முயற்சிகள் எதுவரை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு குறித்தும்– சமாதான வழிமுறை பற்றியும் உறுதியாகவே பேசுகின்றார். தற்போதைய இந்திய விஜயத்தின்போதுகூட, இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் எனத் தன்னைச் சந்தித்த யு.என்.ஐ. செய்தியாளரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பேசுவது ஒன்றும் புதியதல்லத் தான். ஆனால், அவரின் இத்தகைய பேச்சானது உளப்பூர்வமானதா? நம்பகத்தன்மை பொருந்தியதுதானா? என்ற கேள்விகள் எழவைக்கக் கூடிய வகையில் அவரின் சில அண்மைய நடவடிக்கைகள் உள்ளன.

புரிந்துணர்வு உடன்பாடு சிறிலங்கா படைத் தரப்பின் ஆயுதப் பெருக்கத்தைத் தடை செய்யவில்லை. சிறிலங்கா அரசாங்கம் தமக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான தடை எதையும் அது விதிக்கவில்லை. விடுதலைப்புலிகளைப் பொறுத்தும் அத்தகைய தடை எதையும் உடன்பாடு விதிக்காதுவிட்டாலும் புலிகள் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான மார்க்கங்களை உடன்பாடு தடை செய்கின்றது என்பது நிராகரிக்க முடியாதுள்ளது.

சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு தமக்கு ஏற்பட்ட இழப்புக்கள், பற்றாக்குறைகள் என்பனவற்றை நிவர்த்தி செய்துகொள்ள முற்படுவதை எவருமே தவறாகப் பிரஸ்தாபிக்க முடியாது. ஆனால், யுத்த நிறுத்த காலத்தை முழு அளவிலான நவீனமயப்படுத்தலுக்கும், இராணுவ ஒத்துழைப்பைத் தேடிக் கொள்வதற்கும் அரசாங்கம் பயன்படுத்துவதானது இனப்பிரச்சினைக்குச் சமாதான தீர்வில் நம்பிக்கை கொண்டதன் விளைவே என எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் இரண்டு வரவு–செலவுத் திட்டங்களை ஐ.தே. முன்னணி அரசாங்கம் தயாரித்துள்ளது. (அடுத்த மாதத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு–செலவுத் திட்டத்துடன்) ஆனால், இவ்விரண்டு வரவு–செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புச் செலவீனத்தில் பெரும் வெட்டு எதனையும் அரசாங்கம் மேற்கொண்டதாக இல்லை. அதாவது, யுத்த காலத்தை ஒத்ததான – உயர் பாதுகாப்புச் செலவீனத்தை ஒத்ததாகவே தற்போதைய செலவீடும் உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, யுத்த காலத்தில் மேற்கொள்ளப்படாத அளவில் சர்வதேச, பிராந்திய பாதுகாப்பு வலைப் பின்னல் என்பனவற்றுடன் நெருக்கமான உறவை நிலை நிறுத்திக் கொள்ள அரசாங்கம் முற்பட்டு நிற்கின்றது. அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்துள்ள நாடுகளுடன் நெருக்கமான இராணுவ ஒத்துழைப்பை மேற்கொள்வதில் அரசாங்கம் தீவிர கவனம் கொண்டுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையானது, ரணில் விக்கிரமசிங்க அரசியற் தீர்வு குறித்து எத்தனை தடவை வெளிப்படையாகக் கூறினும் – அவர் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையும் கொண்டவராக இருப்பதையே அவரது செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன. அவ்வாறு இல்லாதுவிடில் பெருமளவிலான இராணுவத் தளபாடக் கொள்வனவு, பிராந்திய, சர்வதேச வல்லரசுகளுடனான இராணுவ உடன்பாடுகள் / ஒத்துழைப்புக்கள் ஏன்?

இது ஒருபுறமிருக்க. விடுதலைப்புலிகள் அமைப்பு சமாதான முயற்சிகளை முன்நோக்கி நகர்த்தும் வகையில் இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட வரைவு ஒன்றைச் சமர்ப்பிக்கத் தயாராகி வரும் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசுடன் இராணுவ ஒத்துழைப்புக்கள் குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருப்பதானது இரு வகையிலான கேள்விகளை எழுப்புகின்றது.

ஒன்று, விடுதலைப்புலிகள் முன்வைக்கவுள்ள இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவில் ஒரு தாக்கத்தை / அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நடவடிக்கையா? அதாவது, புலிகள் திட்ட வரைவில் கோரவுள்ள அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கானதா! அன்றி இராணுவ ரீதியில் மேன்மை பெற்றதொரு நிலையில் நின்று இடைக்கால நிர்வாகசபை குறித்துப் பேசுவதன் மூலம் புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும் என்ற நம்பிக்கையிலா?

ஆனால், காரணி எதுவாகிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சிற்கும் – செயலுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. இராணுவ மேலாண்மை – விடுதலைப்புலிகள் மீது இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்தல் என்பனவற்றிலும் அவர் நம்பிக்கை கொண்டவராகவே உள்ளார் போல் தெரிகிறது. இதன் வெளிப்பாடாகவே ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயமும், அங்கு மேற்கொள்ளப்பட்ட உடன்பாடுகளும் உள்ளன.

ரணில் விக்கிரம சிங்காவின் போக்கானது, அவர் இராணுவத் தீர்வில் முற்றாக நம்பிக்கை இழந்தவராக இல்லை என்பதையே உணர்த்துவதாய் உள்ளது. இது அரசியல் தீர்வின் மீதான நம்பிக்கையைச் சிதைப்பதாகவும், நாட்டை மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கி இழுத்துச் செல்வதாகக் கூட இருந்துவிடலாம். இந்நிலையில் பிரதமர் ரணிலின் சமாதான முயற்சிகள் எதுவரை என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிவிடும்.

# எதிர்கால சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பு தனித்தரப்பாகப் பங்குகொள்வது அவசியமாகும்

## -சனாதிபதியின் ஆலோசகர் கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்கால பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பு தனித்தரப்பாக பங்குகொள்ள வேண்டும் என்பது காலத்தின் அவசியம் என பாராளுமன்ற உறுப்பினரும் சனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குகொள்ள வேண்டும் என வலியுறுத்தி நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற ஒத்தி வைப்பு விவாதத்தில் உரையாற்றிய அவர், முஸ்லிம் மக்கள் தமது பிரச்சினைகளை சர்வதேசத்திடம் சமர்ப்பிக்க அவர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் தேவை எனக் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய இந்து கலாச்சார அமைச்சர் ரி.மகேஸ்வரன் தெரிவிக்கையில், முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குகொள்வாரா? இல்லையா என்பதை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே தீர்மானிக்க வேண்டும். முஸ்லிம்களின் அபிலாசைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால பரிந்துரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துத்துவத்தை பிரபாகரனே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அனுரா திஸாநாயக்க தெரிவிக்கையில், முஸ்லிம்கள் எதிர்காலப் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள வேண்டுமானால், அதற்குப் பாராளுமன்ற விவாதம் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. நாம் இதற்கு ஆதரவாகப் பேசினாலும் கூட அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனை முஸ்லிம் மக்கள் மத்தியில்,தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்காகவே பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளார். அரசாங்க அமைச்சராக இருந்து கொண்டு, தமது கோரிக்கையை வென்றெடுக்க அமைச்சர் ஹக்கீமுக்கு முடியாமல் போனது கவலைக்குரியது என்றார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உரையாற்றுகையில்,

பொதுசன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சமர்ப்பித்த யோசனையின் போது அதில் முஸ்லிம் தரப்பை பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ளும் தரப்பாக அது ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இன்று அரசியல் காய் நகர்த்தலுக்காக பொதுசன ஐக்கிய முன்னணி, முஸ்லிம்களின் சார்பாக பேசுகிறது எனக் கூறினார். (32)

# அடிப்படை வசதிகள் எதுவுமேயில்லை ஆட்சேபித்து மணல் ஏற்றத் தடை!

## -குடத்தனை மணற்காடு மக்கள் அறிவிப்பு

(வடமராட்சி)

"தமது கிராமங்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் எதனையும் செய்து வழங்க மறுத்து வரும் அரச அதிகாரிகள், தமது மண்வளத்தை மட்டும் சுரண்டிச்செல்வதில் முனைப்பாக உள்ளதாக" குற்றஞ்சாட்டி வடமராட்சி கிழக்கின் குடத்தனை மற்றும் மணற்காடு பகுதிகளில் மணல் அகழ்வதற்கு அப்பிரதேச மக்கள் தடைவிதித்துள்ளனர்.

குடாநாட்டின் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலுள்ள தமது கிராமங்களுக்கு போதிய வைத்திய வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ என எந்தவொரு அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்ய முன்வராத அரச அதிகாரிகள், மணல் அகழும் விடயத்தில் மட்டும் அக்கறை கொண்டிருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இத்தடையினால் அப்பகுதிக்கு மணல் ஏற்றச்சென்ற நூற்றுக்கணக்கான வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன.

குடாநாட்டின் கட்டட நிர்மாணப் பணிகளுக்கு தேவையான மணல் கிடைக்கக்கூடிய மண்கும்பான், கச்சாய் மற்றும் கிழக்கு அரியாலைப் பகுதிகளில் படைத்தளங்களை அமைத்து நிலைகொண்டுள்ள படையினர் அப்பகுதிகளில் மணல் அகழத் தொடர்ந்தும் தடை விதித்துள்ளனர்.

இந்நிலையில் எஞ்சியுள்ள வடமராட்சி கிழக்கின் குடத்தனை மணற்காடு பகுதிகளில் இருந்தே மணல் அகழப்படவேண்டியுள்ளது. ஆயினும் வேகமாக இடம்பெற்று வரும் மணல் அகழ்வினால் தங்களது கிராமங்கள் கடலரிப்பால் பாதிக்கப்படலாம் எனவும் இப்பிரதேச மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதிகளில் மணல் அகழ அப்பகுதி மக்கள் தடைவிதித்துள்ள நிலையில், அத்தடையை விலக்கிக்கொள்ளுமாறு அப்பிரதேச மக்களை வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் கடந்த திங்கள் அன்று சந்தித்து கோரியிருந்த போதிலும் அப்பிரதேச மக்கள் அதற்கு உடன்படவில்லை.

இத்தடை தொடர்ந்தும் நீடிக்குமாயின் குடாநாட்டின் கட்டட நிர்மாணப்பணிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (27)

# சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டாலே நாட்டை அபிவிருத்தி நோக்கி நகர்த்த முடியும்

## -ஆசிய அபிவிருத்தி வங்கி வதிவிடப் பிரதிநிதி

புலிகளும்- அரசும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்து நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுமென அரசிடம் அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி உலக வங்கி உட்பட நிதிவழங்கும் நாடுகள 450 பில்லியன் ரூபாவை வழங்குவதற்கு டோக்கியோ மாநாட்டில் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவது அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலமாக 20 வருடகால யுத்தத்தினால் அழிவுற்ற வடகிழக்கைத் துரிதமாக அபிவிருத்தி செய்யமுடியுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதாக உலக நாடுகள் உறுதியளித்துள்ளன. பணத்தின் பெரும பகுதி வட-கிழக்கிற்கு ஒதுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மூதூர் நால் குழி கிராமத்துக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியில் 3.2 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட படகுப்பாதையினை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஆசிய வெற்றிக் கிண்ண தகுதிகாண் போட்டி சிறிலங்கா அணிக்குப் படுதோல்விகள்

ஆசிய வெற்றிக் கிண்ண இரண்டாம் கட்டத் தகுதிகாண் உதைபந்தாட்டத் தொடரில் சிரியாவுடனான இரண்டு ஆட்டங்களிலும் சிறிலங்கா அணி படுதோல்வி கண்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி டமஸ்காரில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 5-0 என்ற கோல்களால் தோல்வி கண்ட சிறிலங்கா அணி இரண்டாவது ஆட்டத்தில் 8-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோல்வி அடைந்துள்ளது.

போட்டித் தொடரில் இரண்டாம் கட்டத்தில் ஆறு ஆட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மூன்றாவது கட்ட ஆட்டங்களில் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் 12 ஆம் திகதிகளில் துர்க்மெனிஸ்தான் அணியுடனும் சிறிலங்கா போதவுள்ளது.

லீக் அடிப்படையில் நடைபெற்று வரும் இப் போட்டித் தொடரில் அதிக புள்ளிகளைப் பெறும் இரண்டு அணிகள் மூன்றாம் கட்டத்துக்கான தகுதியைப் பெற்றுவிடும்.

# மும்முனைத் தொடர் ஆரம்பம் கங்குலிக்குப் பதில் பதானி

இன்று சென்னையில் ஆரம்பமாகவுள்ள முக்கோண ஒருநாள் போட்டிகளுக்கு இந்திய அணித் தலைவராக ராவிட்டே இருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இத்தொடரின் முதல இரு போட்டிகளுக்கும் கங்குலிக்குப் பதிலாக ஹேமங் பதானி சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இது கால் தொடையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதால் முதலாவி டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்ள முடியாத கங்குலி தனது சொந்த ஊரான கொல்கத்தா திரும்பிய நிலையில் அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் மீண்டும் ஒரு சத்திரசிகிச்சை மேற்கொண்டனர். இதனால் இரண்டு வாரங்களுக்கு ஓய்வெடுக்க வேண்டிய நிலையில் உள்ள கங்குலி காயம் விரைவாகக் குணமடையாத பட்சத்தில் முக்கோணத் தொடரில் அவரது பங்கேற்பு கேள்விக்குறியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# நிமலராஜன் படுகொலையில் படையினருக்கு தொடர்பில்லை என ஏற்றுக்கொள்ள முடியாது

## யாழ். மாவட்ட நீதவான் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டமைக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பில்லை என்ற வட முனைப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் பொன்சேகாவின் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு யாழ். மாவட்ட நீதவான் விக்கினராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை மேற்படி நீதவானை அவரது அலுவலகத்தில் சந்தித்த ஊடகவியலாளர்கள் நேற்று முன்தினம் மேஜர் ஜெனரல் பொன்சேகாவினால் வட இலங்கை பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்ட கூற்றுத் தொடர்பாக பிரஸ்தாபித்தபோதே அவர் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட இடம் படுகொலை செய்யப்பட்ட நேரத்தில் ஊரடங்குச் சட்டம் என்ற பெயரில் முற்று முழுதான இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்துள்ளதுடன் அவர் இருந்த இடத்தைச் சூழ படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததால் மேற்படி பிரதேசத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு சம்பவத்துக்கும் படையினரே பொறுப்பேற்க வேண்டியது சட்டம். இவ்வாறான நிலையில், மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இராணுவத்தினராகவோ அல்லது இராணுவத்தினருடன் சம்பந்தப்பட்டவர்களாகவோ இருந்தால் மாத்திரமே இவ்வாறு இராணுவ அனுமதியுடன் இப்படியான ஒரு செயலைச் செய்திருக்க முடியும் எனவும் இதனால் இக்கொலைக்கு படையினர் பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாகவும், இதனாலேயே தாம் இக்கொலை தொடர்பாக முதல் விசாரணை நடத்தப்பட்டபோது அவ் இடத்திற்கு பொறுப்பாக இருந்த 512ஆவது பிரிகேட் படையணி தளபதியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்யுமாறு தான் யாழ். பொலிசாருக்கு உத்தரவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

### -மேஜர் ஈழப்பிரியாவின் ஞாபகார்த்த-

# கராத்தே சுற்றுப் போட்டியில் கிளி.மாவட்டம் முதலிடம்

(அலுவலகசெய்தியாளர்)

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக நடைபெற்ற கராத்தே சுற்றுப்போட்டியில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களான குருகுலம், காந்திநிலைய வீர வீராங்கனைகளின் அபாரமான திறமையினால் கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்தைப் பெற்று சம்பியனானது.

தமிழீழ விளையாட்டுத்துறையால் தமிழர் தாயகப் பகுதியில் எட்டு மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து நடாத்தப்பட்ட மேற்படி கராத்தே போட்டி கிளி.மத்திய விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றன. நேற்று நடைபெற்ற இறுதிச் சுற்றுப் போட்டி முடிவுகளுடன் கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்தையும், இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டமும், மூன்றாம் இடத்தை யாழ்.மாவட்டமும், நான்காம் இடத்தை மட்டக்களப்பு மாவட்டமும் பெற்றுக்கொண்டன.

பல்வேறு பிரிவுகளாக நடைபெற்ற கராத்தே போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியினை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா அவர்கள் ஏற்றிவைத்தார். விளையாட்டுத் துறைக்கொடியை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். ஈழப்பிரியாவின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை காவல்துறைத் துணைப் பொறுப்பாளர் மாதவன் மற்றும் மேஜர் ஈழப்பிரியாவின் தாய் தந்தையர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து இறுதிநாள் போட்டிகள் பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பமாகியது. (லோ)

### பருத்...

இச்சம்பவங்களை அவதானித்து கோபமுற்ற சக மீனவர்களும், பொதுமக்களும் குறித்த காவலரணைச் சுற்றிவளைத்து அப்படையினரின் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். இதனால், கோபமுற்ற படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் அத்துப்பாக்கிப் பிடியினால் பொதுமக்களைத் தாக்க ஆரம்பித்தனர்.

படையினரின் தாக்குதலிற்குள்ளாகி குறித்த இளைஞனின் தந்தையான தியோகுப்பிள்ளை பீற்றர் (வயது -52) என்பவர் அப்போது சிறுகாயங்களிற்கு உள்ளாகியிருந்தார்.

இச்சம்பவங்களினை அடுத்து கோபமுற்ற, பொதுமக்கள் மேலும் மேலும் கடற்கரை வீதியில் குவியத் தொடங்கினர். அதேவேளை, பருத்தித்துறை முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள 524ஆவது படைப் பிரிவின் உயரதிகாரியொருவர் சக படையினருடன் அங்கு வந்து நிலைமையை சுமுகமாக்க முற்பட்டார்.

சம்பவத்தில் தாக்கப்பட்ட இளைஞனை விசாரணை செய்ய ஏதுவாக அங்கு கொண்டு வருமாறு குறித்த படை அதிகாரி அப்போது கோரினார். எனினும், குறித்த இளைஞனது பாதுகாப்பு கருதி அவரை அங்கு ஆஜர் செய்ய முனை மீனவர் சங்கத் தலைவர் மறுத்துவிட்டார்.

இந்நிலையில், இன்று காலை 10.00 மணிக்கு கடற்கரை வீதியிலுள்ள புனித தொம்மையப்பர் தேவாலயத்தில் விசேட சந்திப்பொன்றை நடாத்த குறித்த படை அதிகாரி முன்வந்திருந்தார். அங்கு பிரசன்னமாகியிருந்த ஊடகவியலாளர் ஒருவர் முன்னிலையில் அவ்வுறுதியை வழங்குவதாகத் தெரிவித்த அவர், படையினர் அப்பகுதி மக்களை பழிவாங்கும் வகையில் செயற்படமாட்டார்கள் எனவும் உறுதியளித்தார்.

இதையடுத்து அங்கு குழுமியிருந்த பொதுமக்களைக் கலைந்து செல்லுமாறு முனை மீனவர் சங்கத் தலைவர் கோரினார். மக்கள படிப்படியாக அங்கிருந்து கலைந்து செல்ல முற்பட்டனர்.

இதேவேளை, பருத்தித்துறை துறைமுகப் பகுதியிலுள்ள 524 ஆவது படைப் பிரிவின் தலைமை முகாமிலிருந்து நூற்றுக்கான படையினர் கால் நடையாகவும், டிராக்கரர்கள் மூலமும் அப்பகுதியை வந்தடைந்தனர். அத்துடன் இராணுவ பீல்ட் பைக் படையினரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

அங்கு நூற்றுக்கணக்கில் குவிந்த படையினர் திடீரெனக் கிடைத்த உத்தரவொன்றையடுத்து அங்கிருந்து அகன்று கொண்டிருந்த பொதுமக்களை இலக்கு வைத்து தாக்கத் தொடங்கினர். குறித்த பகுதியில் உள்ள கடை ஒன்றையும் அவர்கள் அடித்து நொருக்கினர். தப்பியோடிய பொதுமக்களை ஆண், பெண் வேறுபாடுகளின்றி பொல்லுகளால் துரத்தித் துரத்தித் தாக்கினர். சிலர் உடைந்த பொருட்களாலும் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் கூலித்தொழிலாளியான அரசன் முத்துக்குமாரு (வயது- 35) என்பவர் உள்ளிட்ட நால்வர் காயமடைந்தனர். இதேவேளை, படையினர் முதலில் தாக்கப்பட்ட மீனவ இளைஞரான பீற்றர் மாறன் மற்றும் குடும்பத்தாரை அப்பகுதியிலுள்ள அவர்களது வீட்டில் வைத்து படையினர் பிடிக்க முற்பட்டதாகவும், ஆயினும், அவர்கள் அங்கிருந்து தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

எனினும், நேற்றிரவு வரை அப்பகுதியில் படையினர் நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்ததுடன் படை உயரதிகாரிகள் பலரும ஸ்தலத்திற்கு விஜயம் செய்த வண்ணமிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

### கண்காணிப்பு...

குறுக்காக பொலிசார் லொறிகளை நிறுத்தி மறித்தது, ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னேற முடியாத படிதடுத்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிசாருக்கும் காரசாரமான வாதம் இடம்பெற்றது. ஆயுதந்தாங்கிய பொலிசாரும், கலகம் அடக்கும் பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

தடுக்கப்பட்ட இடத்தில் வைத்து ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்த முன்னணியின் பிரமுகர்கள் சிலர் பேசினர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் நாட்டைக் கையளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அதற்குத் துணைபோகும் நோர்வே கண்காணிப்புக் குழு நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பேசிய பிரமுகர்கள் தெரிவித்தனர். அதன் பின்னர் மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த நோர்வே கண்காணிப்புக் குழுத் தலைவரின் கொடும்பாவியை ஆர்ப்பாட்டக்காரர்கள் எரித்தனர். அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். கிழக்கு மக்கள் முன்னணியின் ஹர்த்தால் அழைப்பு ஆர்ப்பாட்டப் பேரணி என்பனவற்றின் போது நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (25)

### இடைக்...

சம்பந்தமாக நாம் பகிரங்கமாகப் பேசுவது முறையானதல்ல. ஆயினும் தமிழ்மக்களின் அபிலாசைகள் ஏறத்தாழ முழுமையாக நிறைவேற்றப்படக்கூடிய வகையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (லோ)

### வீரச்சாவு...

(1ஆம் பிரிவு மண்டூர் மட்டக்களப்பு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### இடைக்கால...

ஆகியோர் கலந்துகொண்டனர். நாங்கள் இன்று தமிழ்க்கூட்டமைப் பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களது தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளோம்.

இதில் முக்கியமாக இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு சம்பந்தமாகவும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாகவும் எமது எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும் கூடுதலாகப் பேசியுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைகளில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏதாவது புதிய விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் எனப் பேச்சுக்களின் போது முன்வைத்துள்ளனவா எனக் கேட்கப்பட்ட போது,

நிச்சயமாக அவர்களும் தமிழர் தாயகப் பகுதிகளில் முழு அதிகாரம் உள்ள ஒரு நிர்வாக அலகை உருவாக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார்கள். எங்களுடைய தமிழ் மக்களும் அதே அளவு உறுதியோடும் எதிர்பார்ப்புடனும் இருக்கிறார்கள். இதனையே தான் அவர்களும் எங்களிடம் முன்வைத்தார்கள்.

ஏற்கனவே நாங்கள் அயர்லாந்துக்குச் செல்லும் முன்னரே நாங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து அவர்களுடனும் கருத்துக்களைப் பரிமாறி இருக்கின்றோம். எங்களுடைய மக்களையும் சந்தித்திருக்கிறோம். பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக சமூகம் ஏனைய சமூக அமைப்புக்களையும் சந்தித்து அவர்களுடைய கருத்துக்களையும் அறிந்திருக்கின்றோம். அவர்களுடைய எதிர்பார்ப்புகள் அபிலாசைகள் ஒட்டுமொத்தமான எங்களுடைய தமிழ் மக்களின் அபிலாசைகளுடன் உள்ளடங்கியுள்ளன. ஆகவே அவற்றை நாங்கள் கருத்தில் எடுத்துத்தான் இந்த வரைவை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறோம். முயன்றிருக்கிறோம்.

* உங்களால் தயாரிக்கப்பட்ட ஆலோசனைகள் முழுமை பெற்றுவிட்டதா, என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையில்,

நாங்கள் அயர்லாந்திலே சென்று எங்களுடைய இடைக்கால நிர்வாக வரைவு சம்பந்தமாகப் பல கருத்துக்களை உள்வாங்கி அந்த வரைவை வரைந்திருக்கிறோம். அது சம்பந்தமான கலந்தாலோசனைகளைத் தற்போது எங்களது தலைமைப் பீடத்தின் பரிசீலனைக்குக் கொடுத்திருக்கிறோம். அது பரிசீலிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அது பூர்த்தியான நிலைக்கு வந்திருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன்.

இந்த வரைவை நாம் கையளிக்கும் வரை அதன் உள்ளடக்கத்தை நாங்கள் வெளியிட முடியாது. நாங்கள் அனுசரணையாளர்கள் ஊடாக அதனைக் கையளித்துச் சிறிலங்கா அரசு பெற்றுக்கொண்டவுடன் தான் நாங்கள் அதன் உள்ளடக்கங்களை வெளிப்படுத்த முடியும் எனத் தெரிவித்ததோடு, எதிர்வரும் 31 ஆம் திகதி நாங்கள் நோர்வே தரப்பு ஊடாக இத்திட்டவரைவைக் கையளிக்க இருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மீண்டும் பேச்சுவார்த்தை வந்தால் முஸ்லிம்கள் தரப்பில் யார் பேசுக்குப் போவார்கள் எனத் தீர்மானித்தீர்களா என்ற கேள்விக்குப் பதில் அளித்த அவர்,

எதிர்காலத்தில் இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாக நாங்கள் இணக்கப்பாடு காணுகின்ற சூழலில் இந்தக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வதற்கு முஸ்லிம் மக்களினுடைய பிரதிநிதித்துவம் நிச்சயமாகத் தேவையானதும் யதார்த்தமானதுமாகும்.

அது முஸ்லிம் மக்களினுடைய பிரநிதித்துவம் சம்பந்தமான விடயங்களை நாங்கள் பேசுகின்ற போது முஸ்லிம்களின் உடைய பிரதிநிதிகளை நாங்கள் அழைத்துப் பேசுவோம்.

தற்போது முன்வைக்கப்படுகின்ற இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான ஆலோசனைகள் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு வடிவங்களுக்கமைய அதனை ஏறக்குறைய உள்ளடக்கியிருக்க வேண்டும் என்ற வகையில் ஒரு எதிர்பார்ப்பு உள்ளது. அந்தவகையில் உங்களது ஆலோசனைகள் முழுமை பெற்றிருக்கின்றனவா? எனக் கேட்டதற்கு,

அவர்கள் ஒரு நல்ல விடயத்தை சிந்தித்திருக்கிறார்கள் என்பதை நம்புகின்றேன். ஏனெனில் இடைக்கால நிர்வாகம் என்பது எங்களுடைய மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கியதாக இருக்கப்பட வேண்டும் என்பது அவசியமானது. எமது மக்களின் அபிலாசைகள் என்பது ஒரு நிரந்தர அரசியல் விடுதலை, அரசியல் தீர்வு அதை நோக்கியதாவே தான் இருக்கிறது. ஆகவே நிச்சயமாக இந்த இடைக்கால வரைவிலும் அவர்கள் சிந்தித்தது போல தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வை அடைவதற்கான வழியைக் காட்டுவதாக இது அமைவது பொருத்தமாக இருக்கும் என்றார்.

### வாசகர்களுக்கு...!

நாளைய வெள்ளிநாதம் தீபாவளி வாழ்த்துக்களுடன் 32 பக்கங்களுடன் வெளிவருகின்றது என்பதை வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

### சாவு அறிவித்தல்

**நாகநாதி பொன்னுத்துரை**

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மாயவனூர் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி பொன்னுத்துரை 22.10.2003 புதன்கிழமை இரவு காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் குலசிங்கம் (கனடா), சகுந்தலாதேவி, சசிகலா, இரத்தினசிங்கம் (மாவத்தகம), மாதினி(ஜேர்மனி), தவமலர், சிவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிஸ்ணவேணி (கொழும்பு), தர்மகுலசிங்கம் (வட்டக்கச்சி), கருணாகரன்(பிரான்ஸ்), ஜெயலெட்சுமி, இராசகுமார்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இறுதிக் கிரியைகள் 23-10-2003 வியாழக்கிழமை இன்று மாலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் மம்மில் மயானத்தில் நடைபெறும்.

5-ம் யூனிற்,
இராமநாதபுரம் (3505)

தகவல் :- மு.குலம்
[மருமகன்]

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.